விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி 09 ஞாயிற்றுக்கிழமை (25.09.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 280

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

சீமெந்து

## பொங்கு தமிழுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி அணிதிரள ஆயத்தமாகுமாறு மக்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியாப் பிரகடனத்தை வலியுறுத்தி எதிர்வரும் செப்டெம்பர் 30ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற வுள்ள பொங்கு தமிழ் நிகழ்விற்கான ஏற்பாடு கள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதாக ஏற்பாட் டுக்குழு அறிவித்துள்ளது.

பொங்கு தமிழ் நிகழ்விற்கான நடைமுறை களையும் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித் துள்ளனர். பொங்குதமிழ் நிகழ்வு நடைபெறும் தினமான செப்டெம்பர் 30ஆம்திகதி மதியம் 12மணிக்கு செயலகம், பிரதேச செயலகங் கள், அரச நிறுவனங்கள் ,வங்கிகள்,ஏனைய நிதி நிறுவனங்கள் அனைத்தும் மூடப்படும்.

அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர் கள்,ஊழியர்கள் நிகழ்வில் கலந்துகொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வியாபார நிலையங்கள் ,மருந்துக் கடைகள் ஏனைய வியாபார நடவடிக்கைகள் ,சந்தைகள்,கட்டட ஒப்பந்த வேலைகள் அனைத்தும் அன்றைய தினம் முழுமையாக மூடப்படும்.

அரச தனியார் போக்கு வரத்துச் சேவை கள் எவையும் இடம்பெறாது.ஏ 9பாதை ஊடான போக்குவரத்தில் ஈடுபடவுள்ள பயணி கள் அன்றைய தினம் தமது பயணத்தை தவிர்க்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகள் வழமைபோல் இயங்கும். பாடசாலை முடிவடையும்போது அல்லது பாடசாலைகளுக்கு வாகனங்கள் வரும்போது ஆசிரியர்களும் மாணவர்களும் பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்துகொள்ள அனுமதிக் குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மதுபானசாலைகள், திரையரங்குகள் அனைத்தும் அன்றையதினம் மூடப்படவேண் டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. நிகழ்வில் கலந்து கொள்ளும் மக்களுக்கென போக்கு வரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

வலிகாமம் மேற்கு,வலிகாமம் வடக்கு , வலிகாமம் கிழக்கு,வடமராட்சி,தென்மராட்சி, தீவகம் போன்ற பிரதேசங்களில் இருந்து வரும் மக்களுக்கான வசதிகள், போக்குவரத் துக்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை நிகழ்வு நடைபெறும் மைதானத்தில் இம் முறை நான்கு பாதை கள் அமைக்கப்பட்டுள்ளன.

குடிநீர்வசதிகளும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன. நிகழ்விற்கு அழைத்துவரப்படும் மக்கள் உரியவாறு இரவு 7.30 மணிக்கு முன்னதாகஉரியஇடங்களுக்கு அனுப்பி வைக் கப்படுவார்கள் என ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

பொங்கு தமிழ் நிகழ்வில் அலை கடலென அணிதிரண்டு உரிமைக்குரலை வெளிப்ப டுத்தி போரைத்தவிர்ப்போம் என ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ச)

# அரசியல்பணி குறித்த முடிவினை தலைமைப் பீடமே தீர்மானிக்கும்

## கண்காணிப்புக் குழுவிடம் இளம்பருதி தெரிவிப்பு



(பளை)

யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அரசியல் போராளிகளுக்கு உரிய பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையில் எமது தலைமைப் பீடத் தின் அனுமதியுடனேயே நாம் அங்கிருந்து வெளியேறினோம். இந்நிலையில் எமது அடுத்த கட்ட பணிகள் குறித்த முடிவினை தலைமைப்பீடமே தீர்மானிக்கும் என யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த போர்நிறுத்தக் கண்கா ணிப்புக்குழுவின் தலைவர் டொன்புறூவ்ஹெவ்டேயிடம் இளம் பரிதி இதனைத் தெரிவித்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று இரவு 7.15மணி யளவில் இளைஞர் ஒருவர் அவரது தையல் கடைக்குள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள் ளார். சுட்டுக்கொல்லப்பட்டவர் இருதயபுரம் குமரத்தன் கோயிலடியைச் சேர்ந்த வேலு கிசோக்குமார் (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக மட்டக்களப்புப் பொலி ஸார் தெரிவித்தனர்.

கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பத்து வருடங்களாக இருதயபுரத்தில் வசித்து வந்தார். அத்துடன் கராத்தே,ஜிம்னா ஸ்டிக் போன்ற கலை (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மேல் நீதிமன்றத்திற்கு புதிய நீதிபதி நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மேல்நீதி மன்ற நீதிபதியாக நீதிபதி எஸ். தியாகேந்திரன் நியமிக்கப்பட் டுள்ளார். இவர் நாளை தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.




யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி யாக கடமை யாற்றிய கே.பி.எஸ். வரதராஜா ஓய்வு பெற்றதையடுத்து அவரது இடத்திற்கு எஸ்.தியாகேந்திரன் நியமிக்கப் பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட நீதிபதியாக பணியாற்றிய அவர் கடந்த வியாழக்கிழமை பிரதம நீதியரசர் (12ஆம் பக்கம் பார்க்க)

## ரீட்டாவினால் அதிர்ந்தது அமெரிக்கா!

(அமெரிக்கா)



அமெரிக்காவை ஒரு வார காலமாக மிரட்டி வந்த ரீட்டா சூறாவளி நேற்று கரையைக் கடந்தது. அப்போது வீசிய பயங்கரக் காற்றினால் மின் பிறப்பாக்கிகள் வெடித்துச் சிதறின.

இதனால் கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்தன. ஆளைத்தள்ளும் காற்று ,இடைவிடாமல் கொட்டிய மழை இவற்றுடன் 200 கி.மீ.வேகத் தில் நேற்றுப் பிற்பகல் ரீட்டா சூறாவளி கரையைக் கடந்தது.

ரீட்டா சூறாவளி டெக்ஷ்ஷாஸ் மற்றும் லூசியானா மாகாணக் கடற்கரையை தொட் டதும் ரீட்டாவின் வேகம் மேலும் அதிகரித் தது. கொலராடோ இராணுவ முகாமில் இருந்தபடி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் சூறாவளியைக் கண்காணித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)




SWISS
Mineral Water

Buy Swiss Mineral and win several lakhs worth of prices



Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

சுவிஸ் மினரலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

# நேர்மையான உள்ளத்தோடு ஆண்டவரைத் தேடுங்கள்!

இயற்கையின் அனர்த்தங்கள் என்றுமில்லாதவாறு அண்மைக் காலங்களில் அதிகரித்துக் கொண்டே வருவதைக் காண்கின்றோம். மனிதரின் நடத்தைகள் பண்பில்லாதவாறு மாறி வருவதையும் அவதானிக்கின்றோம். பணமும் புகழும் மனிதனின் நிலைப்பாடு



களை மாறுதலுக்கு உள்ளாக்குகின்றன. செருக்கின் செல்வாக்கு மற்றவரை மதிக்காமல் செய்கின்றது. தம் புகழுக்காகப் பலர் மற்றவர்களின முதுகில் சவாரி விடுகின்றனர். தமது செல்வாக்கை நிலைநாட்ட மற்றவர்களைக் கசக்கிப் பிழிகின்றனர். ஏழையா என்ன செய்வார்.

ஆண்டவர் கூறுகின்றார் நேரியவா தம் நேரிய நடத்தையினின்று விலகி தவறிழைத்தால் அவர்கள் தாம் இழைதத தவறின் பொருட்டு சாவர். பொல்லார் தாம் செய்த பொல்லாப் பினினறு விலகி நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால் தம் உயிரை அவர்கள் காத்துக்கொள்வர். (எசேக்கி 18:26,27) என்று வெளிப்படுத்துகின்றார்.

### இயேசுவின் மனநிலை வேண்டும்

எமது அன்றாட வாழ்வானது கிறிஸதுவோடு கொண்ட இலட்சியத்தின் பாதையிலே செல்லுவதை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும்

## பரமபிதாகாட்டிய பாதை

ஆன்மீகத்தையோ ஆண்டவனையோ அடைந்துகொள்ள முடியாது. இயேசுவோடு வாழ்கின்றீர்கள என்றால் ஒரே எண்ணமும் ஒரே அன்பும் ஒரே உள்ளமும் கொண்டவராய் என் மகிழ்ச்சியை நிறைவாக்குங்கள் என்று கூறுகிறார் கிறிஸ்து.

இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கவேண்டும். எளிமையும் தாழ்மையும் கிறிஸ்துவைப் போதிப்பவர்களிலே மிளிர வேண்டும். தொழிலாக அல்ல தொண்டாகப் பணியை மேற்கொள்ளும் போது தான் கிறிஸ்துவை மற்றவர்க்கு கொடுக்க முடியும். அதற்கு மாறாகச செயற்படும் பொழுது கிறிஸ்து அங்கிருந்து விலகிச்சென்று விடுகின்றார். பல மொழிகளைப் பழகிக் கொண்டாலோ நாம் பக்தர்கள் ஆகிவிட முடியாது.

### காலத்தின் பாடம்

கட்சி மனப்பான்மைக்கும் வீண் பெருமைக்கும் இடம்தர வேண்டாம். நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களை நம்மிலும் உயர்ந்தவாகளாகக் கருத வேண்டும். பழமை பேசி புண்ணியவான்களின் பட்டியலில் இடம்பிடிக்க

மனிதனின் கொடுமைகளை இயற்கையோ,இறைவனோ பொறுக்க முடியாது செயற்படுவதாகவே தற்கால வெள்ள அனர்த்தங்கள் காணப்படுகின்றன. அண்மைக்கால நிகழ்வின் இறுதிக்கால அறிகுறிகளாகத் தென்படுகின்றன. மனித மாண்பு அழிந்து போக மாநிலத்தில் விதியுமாச்சோ இனிய வாழ்வு போரினாலே இருளடைந்து போகலாமோ? போதிமாதவன் நபிகள இயேசு,கீதை பாதைகள் மறநது போச்சோ? இனத்தின் பெயரிலே பிரிவினைகள், எப்படி ஒரே மனத்தினராய் இருப்பது.

### நேர்மையான உள்ளம் வேண்டும்

மனிதா் தம்மைக் கடவுளின் கருத்தில் ஒப்படைக்கும்போது வாழ்வு பெறுகிறார். மாறாக மனிதர் கடவுளை தனது கரத்திற்குக் கொண்டு வர நினைக்கும் போது விபரிதங்களை அடைந்து கொள்கின்றான். உள்ளத்திலே சிம்மாசனம் ஏற்ற வேண்டியவரை உருவத்தைப் பொறுத்து ஒரு மூலையிலே ஒய்வாக இருக்கச் செய்து அவரின் அலுவலிலேதான் கையிடுகிறான். மன்னிப்பு கொடுக்க முடியாதவனாய் மரணிக்கச் செய்கின்றான். பெருமையின் எல்லைக்கு செல்லவேண்டும் என்ற ஆவலில் கொள்ளையடிக்கவோ கொலை செய்யவோ பஞ்சமா பாதங்களைச் செய்யவோ அச்சம் கொள்ளாதவனாகக் காணப்படுகின்றான்.

உலக வாழ்வானது பாசம் நிறைநததாக அல்ல. பயம் நிறைந்து அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. நோமையான உள்ளத்தோடு ஆண்டவரைத் தேடுங்கள். கபடமற்ற உள்ளத்தோடு அடுத்திருப்பவா்களுக்கு உதவி செய்யுங்கள். ஆண்டவர் கருணை கூர்வார் எமக்கு ஆறுதல் அளிப்பார்.

**யாழ். ஜெயம்தாசன்**


## சிறு விளம்பரம்

**யுனிவெக்**

2005 A/L பரீட்சையில் சித்தியடைந்த 300 District Rank இற்கு உட்பட்ட வலிகாம பிரதேச மாணவர் கள் 29.09.2005இல் திகதிக்கு முன்னர் சங்கானை இலங்கை வங்கி அருகில் உள்ள யுனிவெக் கணனிப் பயிற்சிக் கல்லூரியில் 2000/= பெறுமதியான புலமைப்பரிசிலிற்கான காசோலையினைப் பெற்றுக்கொள்ளவும். ஏனைய பிரதேச மாணவர்களிற்கு பின்னர் அறிவிக்கப்படும்.

T.P.-077-6176476

(9912)

## மரக்கன்றுகள் விநியோகம்

இந்து ஆலயங்களில் வைத்து வளர்க்கக்கூடிய நாகலிங்கம்பூ,வன்னி மரக்கன்றுகள் விநியோகிக்க எண்ணியுள்ளோம். ஆர்வமுடையோர் தொடர்பு கொள்ளவும். Fancy Museum, 253 B, GALLE Road, Wellawatte Complex, Colombo-6

T.P-0112 580216

(9914)

## தேவை

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியிலுள்ள பான்சி கடைக்கு உதவி விற்பனையாளா் தேவை. சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல-100, வலம்புரி, இல-3 2ஆம் ஒழுங்கை,பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

(9915)


## பிரேமதாஸா படுகொலை தீரவிசாரிக்கப்படவில்லை

## அவரது புதல்வர் சஜித் பிரேமதாஸா குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி அமரர் [பிரே]ம தாஸா படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி விரிவான விசாரணை நடாத்த வேண்டியதன் அவசியத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்கள பலா் வலியுறுத்தியுள்ளனர்.

அப்போதைய ஆட்சியாளர்கள் தங்கள் தந்தையின் மரணம் பற்றி தர விசிரிக்க தவறிவிடடார்கள் எனறு அவரது புதலவரான பாராளுமன்ற உறுப்பினா சஜித் பிரேமதாஸா தெரிவித்துளளார்.

சம்பவம் நடந்த ஸ்தலத்தில் இருந்த பொருட்களை குறித்த நபர் ஒருவர் அப்புறப்படுத்திவிட்டார் எனவும் அவர் சாடியுள்ளார்.

1993ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி பிரேமதாஸா படுகொலை செய்யப்பட்டபோது ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளராக சிறிசேனகூரே கடமையாற்றினார். அதற்குப் பின்னர் பதில் ஜனாதிபதியாக கடமைகளைப் பெறுப்பேற்ற டி.பி.விஜயதுங்கவோ பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவோ முழு விசாரணைகளை நடாத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அநேக அங்கத்த வா்களின ஆதங்கம் ஆகும்.

தாம் படுகொலை செய்வதற்கு முதல் நாள் நடந்த பொதுக்கூட்டத்தில உரையாற்றிய முன்னாள் பிரேமதாஸ அமரர் அத்துலத் முதலியின் படுகொலை பற்றி தம் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் பற்றிப் பேசினார். அந்தப் படுகொலை தொடர்பான அனைத்து விடயங்களையும் மேதினக் கூட்டத்தில் வெளிப்படுத்தப் போவதாக அவர் தெரிவித்தார்.

அமரர் பிரேமதாஸா தன்னைப் படுகொலை செய்தாலும் தமது நற்பெயரைக் கொன்றுவிட வேண்டாம் என சோகம் தொனிக்கப் பேசியதை ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவாகள நினைவு கூர்ந்துள்ளனர். (அ-7)

## இராசிபலன்

**25.09.2005**

**(புராட்டாதி 09 ஞாயிற்றுக்கிழமை)**

**அட்டமி பி.இ.4.17 மணிவரை**

**மிருகடசீரிடம்மரணபி.ப12.59மணிவரை**

**மத்தியாஷ்டமி**

**இராகுகாலம் 4.32 - 6.02 மணிவரை**

**சுபநேரம் 9.02-10 .32 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | நினைத்த காரியம் கைகூடும், அந்நியர் சந்திப்பு, கூட்டுமுயற்சி, பொருள் சேர்க்கை. |
| இடபம் | காரிய சிந்தை, தனவிரயம், போசன சுகக் குறைவு, கோபப்படுதல். |
| மிதுனம் | சிந்தனை மிகுதி, இடமாற்றம், போசன சுகம், தெய்வசிந்தை. |
| கடகம் | வாக்குமேன்மை, இடமாற்றம், சுபசெலவு, சயனசுகக்குறைவு. |
| சிங்கம் | பெருமையடைதல், குடும்பசுகம், காரிய அனுகூலம், எதிர்பாராத நன்மை. |
| கன்னி | பிறருக்கு உதவுதல், தொழில் ஆர்வம், தர்மம்,மேன்மை. |
| துலாம் | சரீரப் பிரயாசை, கட்டுப்பாடு, புதியதிட்டமிடல், பிரயாணம். |
| விருச்சிகம் | உடல் நலக்குறைவு, திருடர் பயம், வீண் பயம், போசன சுகம். |
| தனுசு | பிரயாண நன்மை, உறவினர் சந்திப்பு, காரிய அனுகூலம், கலஸ்திர நன்மை. |
| மகரம் | சகோதரர் உதவி, தொழில் முயற்சி, புதிய தகவல், சத்துருஜெயம். |
| கும்பம் | முயற்சி தாமதம், உடல் நலக்குறைவு, வியாபார சிந்தை, போசன சுகம். |
| மீனம் | மாதர் நட்பு, மனப் பதட்டம், உஷ்ண நிலை, காரியதாமதம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

## திருட்டு

இலங்கை மின்சாரசபையின பருத்தித்துறை அலுவலகம் பாவனையாளாகளுக்கு மின் இணைப்புக்களை மேற்கொள்வதற்கென போடப்படும் மின்சாரத் தூண்கள் திருடப்படுவதாக நெல்லியடிப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பிரதேசத்திலேயே இம் மின்சார விநியோகத் தூண்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து-52)

## சுனாமி நிவாரண உதவிகள் மக்களை சென்றடையவில்லை

**பில்கிளின்டன் கவலை**

(இலண்டன்)

இலங்கையில் கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்ததினை அடுத்து இவ்வாறு நிவாரண முயற்சிக்கு உள்நாட்டு அரசியல் பிரிவினைகள் தடங்கலாக இருப்பதாக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம் சமுதாயம் ஆகியோருடன் நிவாரண உதவியை பகிர்ந்துகொள்ள அரசு ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதில் உள்ள தாமதம் காரணமாக நிவாரண உதவி தேவைப்படும் மககளை இவ் உதவி எட்டவில்லை என சுனாமி நிவாரணத்திற்கான ஐ.நா. மன்றத் தூதராக இருக்கும் பில்கிளின்டன் பி.பி.சிக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் தெரிவித்தார்.

இவ் ஒப்பந்தத்தினை இடைநிறுத்தி இலங்கை உயர் நீதிமன்றம் விதித்த உத்தரவு கவலைக்குரிய விடயமாகும்.

பாதிக்கப்பட்ட மககளின் நலனைக் கருத்தில் கொண்டு உயர் நீதிமன்றத்திற்கும் இதனை மீள்பரிசீலணை செய்வதே சிறந்தவழியாக அமையும் என பில்கிளின்டன் தெரிவித்தார். (ச-4)

## வாக்களிப்பின் போது வன்முறைகள் இடம்பெற்றால் மறுவாக்குப் பதிவு

(கொழும்பு)

வன்முறைச் சம்பவங்கள் இடம் பெறும தேர்தல் வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவு நடத்தப்படுமென்றும் தேர்தல் ஆணையாளா் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 17ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்கு மோசடிகள் இடம்பெற்றால் நவம்பர் 19ஆம் திகதி குறித்த வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவு நடத்தப்படும்.

கடந்த பொதுத் தேர்தலைக் காட்டிலும் ஜனாதிபதித் தேர்தலில் 4 இலட்சத்து 28ஆயிரத்து 128பேர் மேலதிகமாக வாக்களிக்கத் தகுதி பெற்றிருக்கின்றார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கொத்தணி வாக்குச்சாவடிகள் அமைக்கபட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள வாக்காளா்களுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவிருக்கின்றன.

இந்நிலையில் வாக்களிப்பதற்கான அடையாளம் கட்டாயப்படுத்தப்படுமா? என்பது குறித்து தம்மால் எதுவும் கூறமுடியாது என்று தெரிவித்தார். (த-9)

## தேர்தல் வன்முறைகளை தடுக்க விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலின் போது இடம்பெறுகின்ற குற்றங்களைத் தவிர்ப்பதற்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவு மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்திலும் அதன் பிறகும் இடம்பெறுகின்ற வன்செயல்களை தடுப்பது சம்பந்தமான அறிவுறுத்தல்கள் பொலிஸாருக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வருவதாக குற்றத்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில், பொலிஸாருக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்களில் விசேடமாக தேர்தல் சட்டதிட்டங்கள் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் பாதாள உலகக் கோஷ்டியினரின் தலையீடுகளை தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றார். (த-7)


## யாழ்ப்பாணம் மாநகர சபை ஆதனவரி அறிவித்தல் - 2005

2005ஆம் ஆண்டு மூன்றாம் கந்தாயத்திற்கான ஆதனவரியை 2005.09.30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு முன்பாக எவ்வித தண்டமுமின்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக கீழ் குறிப்பிடப்படும் விபரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத் தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக்காணிகள் -15%
ஏனைய காணிகள் -20%

நிலுவை உட்பட 2005ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒதத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகரசபை கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252, பிரிவு XII 252 (1) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சி.வி.கே.சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/1704)

# விழிப்பின் பதிவுகள்

வலம்புரி
YATV

## ஜனாதிபதி தேர்தல் பற்றி சிறுபான்மை சமூகம்



எஸ். பாலகிருஷ்ணன் – சமாதான ஆர்வலர்

கேள்வி : திரு மஹிந்த ராஜபக்ஷ ஜேவிபி, ஹெல உறுமய ஆகியவற்றுடன் இணைந்து ஜனாதிபதி தேர்தலில் ஈடுபடுவது இந்த சூழ்நிலையை எவ்வாறு பாதிக்கும்?

பதில்: மிகத்தெளிவாக ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் எதற்காக இணைகிறார் என்பதுதான் முக்கியம். அவருக்கு யாருடனும் இணைந்து போட்டி போடுவதற்கான உரிமை இருக்கிறது. ஏனெனில் இன முரண்பாடுகளை எடுத்து கொண்டால் கடந்த காலங்களிலே கட்சிகளுக்கு இடையிலான போட்டா போட்டிகளிலிருந்து விடுபட்டு ஒஸ்லோ உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையிலே ஒரு சமஷ்டி கட்டமைப்பின் கீழ் உள்ள சுயநிர்ணயத்தை அங்கீகரித்து, இந்த இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு காண்பது என்று இணக்கம் காணப்பட்டு ஜனாதிபதியின் தலைமையிலான சுதந்திர கட்சியும், ஐக்கிய தேசிய கட்சியும் ஏற்றுக் கொண்டது. இதன்படி பார்த்தால் இரு கட்சிகளுக்கும் இடையே ஒரு இணக்கப்பாடு ஏற்படக்கூடிய கால கட்டம் இருந்த நிலையிலே இந்த தேர்தல் அண்மித்தது. அதே நேரம் ஜேவிபி, ஹெலஉறுமய போன்றன சிங்கள, பௌத்த மேலாதிக்க ஆட்சியை உத்தரவாதப்படுத்தக்கூடிய ஒற்றையாட்சித் தன்மையை ஆதரித்து தான் செயற்பட்டு வந்துள்ளன. ஆகவே தான் சமாதான நடைமுறையில் கடந்த தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி புலிகளுடன் பேச்சுவார்த்தையை தொடங்குவோம், ஐக்கிய தேசிய கட்சி விட்ட இடத்திலிருந்து பேச்சுவார்த்தையை ஆரம்பிப்போம் என்றனர். அதற்கு முற்றுமுழுதாக தடையாக ஜேவிபி இருந்தது. அதனால் அந்த அரசாங்கத்துக்கு பேச்சுவார்த்தையை முன்னெடுத்து செல்ல முடியாமல் போனது. புலிகளுக்கோ, தமிழ் மக்களுக்கோ அரசாங்கத்தின் சமாதானம் தொடர்பான ஒரு நம்பகத்தன்மையை பிரகடனப்படுத்த முடியாமல் போனது. இந்த காலகட்டத்தில் தற்போது உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதில் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடிய பல நிபந்தனைகளுக்கு மஹிந்த அவர்கள் இணங்கியிருக்கிறார். இதனால் சமாதான நடைமுறை ஒரு நெருக்கடிக்கு உள்ளாக கூடிய நிலை இருக்கிறது.


கேள்வி : தமிழ் மக்கள் அல்லது சிறுபான்மை இன மக்கள் இந்த ஜனாதிபதி தேர்தலை எவ்வாறு எதிர் கொள்ளப்போகிறார்கள் என கருதுகின்றீர்கள்?

பதில்: இலங்கையின் எதிர்காலத்தை நோக்கும் போது இரண்டு முக்கிய பிரச்சனைகள் இருக்கின்றன. அதில் மிக முக்கியமான பிரச்சனை பொருளாதாரம். இந்த பொருளாதாரம் தொடர்பாக எந்தக்கட்சியுமே கடந்த 55 வருடகாலமாக நீண்டகால தங்குதடையின்றிய பொருளாதாரத்தை நோக்கி செல்லமுடியாது போய்விட்டது. அதற்கு அப்பால் இந்த இனமுரண்பாடு இராணுவ வடிவமெடுத்து, இராணுவ முரண்பாடாக மாற்றப்பட்ட யுத்தத்தின் விளைவாக எதிர்பார்த்த பொருளாதார வளர்ச்சியை நாடு அடைய முடியாமல் போய்விட்டது. இந்த நாட்டிலே ஒற்றையாட்சியை பாதுகாத்துக் கொள்வேன் என்றே மஹிந்த அவர்கள் அளித்த வாக்குறுதி உண்மையிலேயே சிங்கள, பௌத்த மேலாதிக்க ஆட்சியை மீண்டும் நிலைநாட்டும் என்பது அர்த்தமாகிறது. கடந்தகால வரலாறுகளும் அவற்றையே கூறுகிறது. இதேபோல மூன்றாவது முறையாகவும் மஹிந்தவின் இந்த பழைய வரலாறு திருப்பி நிகழப்போகிறது என்ற அச்சம் தான் சிறுபான்மை மக்கள் மத்தியில் இருக்கின்றது.

### இவ்வார விழிப்பில்...

- மக்கள் நியாயசபை
- சுனாமியால் கணவனை இழந்த பெண்கள்
- அம்பாறையின் சுனாமி அபிவிருத்தி
- இன்றைய பார்வை

## கற்காலத்திற்கு அழைத்துச் செல்லும் அரசியல்வாதிகள்



தற்போதைய நாட்டின் சூழலைப் பார்க்கும் போது நாம் கற்காலத்தில் வாழ்கின்றோமா என்ற சந்தேகம் எழுவதை தவிர்க்க முடியாதுள்ளது. உலக நாடுகள் அபிவிருத்தியை நோக்கி பயணம் செய்து கொண்டிருக்கின்ற வேளையில் நாடுகளுக்கு உள்ளும், நாடுகளுக்கு இடையிலும் எழுகின்ற முரண்பாடுகள் சில பேசித் தீர்க்கப்பட்டும், சில முயற்சிகள் தொடரப்பட்டும் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் எமது நாட்டில் நடப்பது ஒரு பின்னோக்கிய பயணமாகவே இருக்கிறது.

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பிருந்து ஆரம்பித்த இனப் பிரச்சனையானது இன்று வரை எவ்விதமான தீர்வுக்கான முன்னேற்றமும் இல்லாது வளர்ந்து வருகிறது. தீர்வு முயற்சிகள் இனவாதிகளால் முறியடிக்கப்பட்டும், ஆட்சியை பிடிப்பதற்காக கட்சிகளால் தீர்வு முயற்சிகள் ரவிலகியும் உள்ளன. இதன் விளைவுகள் இன்று இலங்கைத்தீவில் இரு அரசாங்கம், இரு பொலிஸ், நீதி, சட்ட நிர்வாகங்கள் என பிரிந்துள்ளன. நாட்டின் பிரதமர் என அங்கீகரிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ மடுத்திருப்பதிக்கு சென்று வணங்குவதற்கு கூட அனுமதி இல்லாத நிலையை அவரது கட்சியும் எதிர்க்கட்சியும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன என்பதே இன்றைய யதார்த்தமாகும்.

எனவே அவசரமாக தீர்க்கப்பட வேண்டிய இந்த இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு 60 வருடங்களுக்கு மேல் கடந்துள்ள இன்றைய நாளில் இதற்காக என்ன முயற்சி மேற்கொள்ளப்படுகிறது எனப்பார்த்தால் வெட்கித்தலை. குனியவேண்டியுள்ளது. எத்தனையோ உயிர்கள் மற்றும் கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்து இன்று இலங்கை உலக பிச்சைக்கார நாடக மாறிவிட்ட நிலையாறும். இன்னும் இந்த அரசியல்வாதிகளுக்கும், இனவாதிகளுக்கும் புத்தி வரவில்லை என்பது ஆச்சரியமானதே.

இன்னும் யுத்தம் செய்ய வேண்டும் என்றும், புலிகளை யுத்தம் மூலம் வெல்ல வேண்டும் என்றும், ஒற்றையாட்சிக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் பேசப்படுவது இனப்பிரச்சனைக்கு பேச்சு மூலமான தீர்வொன்றுக்கு வாய்ப்பில்லாத சூழலை எடுத்துக்காட்டுகிறது.

குறிப்பாக எதிர்வரும் நவம்பர் மாதம் 17ம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலையொட்டி இடம் பெறுகின்ற இனவாத பிரசாரங்கள் நிலமையை மோசமாக்கியுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவுடன் கைகோர்த்துள்ள ஜேவிபி, சிஹல உறுமய போன்ற கட்சிகளின் நிபந்தனைகளும், செயற்பாடுகளும் சமாதான செயற்பாடுகளுக்கான வாய்ப்புக்களை இல்லாமல் செய்கின்ற அதேவேளை மஹிந்த ராஜபக்ஷவின் "ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு" என்ற கூற்றானது விடுதலைப்புலிகளுடன் ஒரு உடன்பாட்டிற்கு அவரால் வரமுடியாது என்பதை எடுத்து காட்டுகிறது.

எனவே இத்தனை வருட கால இனப்பிரச்சனையின் இழப்புக்களில் இவர்கள் பாடம் எதனையும் கற்றுக்கொள்ளவில்லை என்பது மட்டுமல்லாது நாட்டை பின்னோக்கிய அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்வதற்கான வாய்ப்புக்களே மேலோங்கி உள்ளன.

இனப்பிரச்சனைக்கான விடயம் இவ்வாறிருக்க கடந்த வருடம் டிசெம்பரில் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு இதுவரை புனர்வாழ்வு வழங்கப்படவில்லை என்பது இலங்கை நாடானது தனது பிரஜைகளுக்கு எத்தகைய நல்வாழ்வினை வழங்குகிறது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிக கூடாரங்களிலும், அகதி முகாம்களிலும் மிகுந்த துன்பத்துடன் வாழ்கின்றனர். கரையோரமாக வாழ்ந்த பெரும்பான்மையான மீனவ சமூகத்தை கொண்ட இம்மக்களுக்கு நிரந்தர வீடுகளோ, வசிப்பிடங்களோ, அடிப்படை வசதிகளோ, தொழிலுக்கான உதவிகளோ வழங்கப்படாமையானது அரசாங்கத்தின் மக்கள் மீதான பொறுப்பற்ற தற்கால போக்கை எடுத்து காட்டுகிறது.

இத்தனை ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் நாட்டின் தெற்கில் மட்டும் குறிப்பிடத்தக்க உதவிகளை வழங்கிவிட்டு வடகிழக்கு மக்கள் தொடர்பில் 9 மாதங்கள் ஆகிவிட்ட நிலையிலும் எதுவித உருப்படியான புனர்வாழ்வு திட்டங்களையும் நடைமுறை படுத்தாமையானது ஆட்சியாளர்களின் இனவாதப் போக்கையும், நேர்மையற்ற தன்மையையும் வெளிப்படுத்துவதோடு இந்த நாட்டின் ஜனநாயகத்தையே கேள்விக்குட்படுத்துகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சர்வதேசம் வழங்கிய நிதியைக் கூட அம்மக்களுக்கு வழங்குவதற்கு துப்பில்லாத ஒரு அரசாங்கத்தின் செயற்பாடானது இந்த நவீன காலத்திற்கு எவ்விதத்திலும் சம்பந்தப்படாத கற்காலத்திற்கு சொந்தமானதாகும்.

இவ்வாறான ஒரு துயரமான நிலையில் பெயரளவிலாவது காணப்பட்ட சுனாமிப்பொதுக் கட்டமைப்பையும் ஏற்றுக்கொள்ள மறுத்து ஒப்பந்தம் செய்துள்ள இந்த நாட்டின் பிரதமரும், ஜனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாடானது இந்த நாட்டிற்கு விமோசனம் எதுவும் இல்லை என்ற எண்ணத்தையே வெளிப்படுத்துகிறது. அதுமட்டுமல்லாது தமது நாட்டை பிற நாடுகளோடு போட்டியிட்டு முன்னேற்ற பாதைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய மக்கள் தலைமைகளின் (?) பின்னோக்கிய தூரதிருஷ்டியற்ற செயற்பாட்டையே வெளிக்காட்டுகிறது.

- என். ஜீவேந்திரன்

## கணவனை இழந்து தவிக்கும் பெண்கள்

இரண்டு தசாப்தகால யுத்தத்தின் விளைவாக 40,000இற்கும் அதிகமான பெண்கள் கணவனை இழந்துள்ளனர். அந்த துயரங்களுக்கு தீர்வு காணும் முன்னரே கடந்த வருடம் இடம் பெற்ற சுனாமியானது பெருமளவிலான பெண்களின் கணவர்மாரை காவு கொண்டுள்ளது. யுத்தத்தால் தம் கணவனை இழந்து தவித்த பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்குமா என்பது கேள்விக்குறியே.

அதேவேளை பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்ல நிலையில் இருக்க வேண்டும் என கனவு கண்ட இவர்கள் தற்போது ஏற்பட்ட இந்நெருக்கடி காரணமாக பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க முடியாது திணறுகின்றனர்.



பெண்கள் ஒரு புறமும் தற்போது ஏற்பட்ட சுனாமியால் தம் கணவனை இழந்து தவிக்கும் பெண்கள் மறுபுறமும் என பெண்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர். குறிப்பாக பாதுகாப்பு, அகதி முகாம் வாழ்க்கை, வருமானத்தை ஈட்டுதல், தமது பிள்ளைகளின் எதிர்காலம் போன்ற வினாக்களுக்கு விடை தெரியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஏற்கனவே யுத்தத்தால் கணவனை இழந்த பெண்கள் கடந்த இரண்டரை வருடகாலமாக தத்தமது சுய முயற்சிகளூடாகவும், அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் மூலமும் தம் குடும்பத்தை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டு வந்தனர். ஓரளவு அபிவிருத்தியும் கண்டிருந்தமை உண்மையே. எனினும் சுனாமியானது அவையனைத்தையும் சீர்குலைத்துள்ள நிலையில் தற்போது தனியான இந்த பெண்கள் செய்வதறியாது திகைப்படைந்துள்ளனர். இது இவ்வாறிருக்க இவர்கள் தமக்கு ஆதரவாக இருந்த உறவு – களையும் பறி கொடுத்த நிலையில் உளரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகியிருப்பது மேலும் கவலையை ஏற்படுத்தும் விடயமாகும்.

குறிப்பாக கரையோரங்களில் வாழும் மீனவ சமூகத்தை சார்ந்த பெண்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கல்வியறிவு இல்லாத இவர்கள் கணவரையும் இழந்துவிட்டு தொழில் ஒன்றை செய்து வருமானத்தை பெறமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஏற்ற தொழில்கள் கிடைப்பது அரிதாகவே காணப்படுகின்றது. அவ்வாறே கிடைத்தாலும் அது அவர்களது பெறுகின்ற குறைந்த வருமானத்தில் உணவுக்கே கஷ்டப்படும் இவர்கள் எவ்வாறு பிள்ளைகளின் எதிர்கால கனவுகளை நனவாக்க முடியும்.

அத்தோடு இளம் வயதில் தம் கணவனை இழப்பதால் இவர்கள் தவறான பாதையை நோக்கி செல்லும் வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன. இதனால் சமுதாய சீரழிவு, கலாசார சீர்கேடு என்பன ஏற்படுவதையும் தடுக்கமுடியாது.

பெண்ணியவாதிகளாக தம்மை இனங்காட்டிக் கொள்ளும் பல்வேறு நிறுவனங்கள், சமூக நலனில் அக்கறை கொள்ளும் பல அமைப்புக்கள் இன்று நம் நாட்டில் காணப்படுகின்றன. இத்தகைய கணவனை இழந்து அல்லல்படும் பெண்களை பற்றி இவர்கள் அக்கறை கொள்வார்களா? அவர்களுக்கு தேவையான தொழில் பயிற்சிகளை வழங்கி அவற்றை தொடர்ந்து சிறிது காலம் நடத்தி செல்வதற்கான சந்தை வாய்ப்புக்கள், உதவிகளை செய்ய வேண்டும். அவர்கள் இவற்றை செய்வார்களா? என பாதிக்கப்பட்ட இப்பெண்கள் கேட்கின்றனர்.

எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தின் மீது மட்டும் பழி சுமத்தி விட்டு ஒதுங்கி கொள்வது இலகுவானதே. எது எவ்வாறெனினும் இந்த கணவனை இழந்த பெண்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும். ஆகவே இவர்களின் நல்வாழ்விற்காக செயற்பட வேண்டியது அனை – வரதும் கடமையாகும்.

- எஸ். கிருபாலினி

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ' அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும்.
விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC
# INTERNATIONAL CRICKET COUNCIL

சர்வதேச கிரிக்கெற் சபையானது (INTERNATIONAL CRICKET COUNCIL) (ஐ.ஸி.ஸி) டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஒருநாள் சர்வதேச போட்டிகளைக் கட்டுப்படுத்தும் அமைப்பாகும். கிரிக்கெற் சர்வதேச ரீதியாக வளர்ச்சி அடைவதற்கு இதுவே காரணம்.

சர்வதேச வளர்ச்சத்திட்டம் இணைந்த அங்கத்துவ உறுப்பினர்களுடாக இது நிறைவேற்றப்படுகிறது.

போட்டிக்கான நிபந்தனைகள் உலகக் கிண்ணம் போன்ற மட்டங்களுக்கு விளையாட்டை உயர்த்தியது.

ஐ.ஸி.ஸியானது, டெஸ்ட் போட்டிகள், ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கான சுயாதீன நடுவர் முறைமைகளையும் நிர்வகிக்கின்றது. சர்வதேச போட்டிகளுக்கான நடைமுறைவிதிகளை முகாமைத்துவம் செய்கிறது.

ஐ.ஸி.ஸியினால் அங்கீகரிக்கப்பட்ட நாடொன்றின் முழு உறுப்பினர்களுமே முகாமைத்துவ அமைப்புக்களாகக் காணப் படுகின்றன.


அதிகாரபூர்வ டெஸ்ட் போட்டிகளுக்கு இவற்றிலிருந்து (10 நாடுகள்) பிரதிநிதகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஐ.ஸி.ஸியினால் அங்கீகாரம் பெற்ற இணைந்த உறுப்பினர்களும் முகாமைத்துவ அமைப் புக்களே. முழு உறுப்பினர்களாக அல்லது இணைந்த உறுப்பினர்களாக அல்லாத கிரிக்கெற் நோக்கத்திற்காக இணைந்த (ஒரு குறிப்பிட்ட பூகோள அமைவிடத்தைக் கொண்ட) நாடுகளும் (55 நாடுகள்) முகாமைத்துவ அமைப்புக்களே.

### ஐ.ஸி.ஸி வரலாறு

1909 ஜுன் 15ஆம் திகதி இங்கிலாந்து தென்னாபிரிக்காவின் பிரதிநிதிகள் "லோர்ட்ஸில்" சந்தித்து "இம்பீரியல் கிரிக்கெற் கொன்பரன்ஸ்" சபையை ஆரம்பித்தனர்.

பிரித்தானிய பொதுநலவாயத்தினுள் அடங்கும் ஆட்சியமைப்புக்கள் மட்டும் உறுப்புரிமையைக் கொண்டிருந்தன. இந்நாடுகளுக்கிடையில்மட்டும் டெஸ்ட் கிரிக்கெற் போட்டிகள் நடாத்தப்பட்டன.



தற்போது லோர்ட்ஸில் அமைந்துள்ள ஐ.ஸி.ஸி தலைமைச் செயலகம்

1926இல் இந்தியா, நியூசிலாந்து, மேற்கிந்திய நாடுகள் முழு உறுப்புரிமை அந்தஸ்தினைப் பெற்றன. 1953இல் பாகிஸ்தான், 1981 இல் இலங்கை, 1992 இல் சிம்பாப்வே 2000இல் பங்களா தேஷ் ஆகியன உறுப்பினராகின.

1961இல் பிரித்தானிய பொதுநலவாயத்திலிருந்து வெளியேறியதால் 3 ஆரம்ப உறுப்பினர்கள் உறுப்புரிமையை இழந்தனர். இவர்கள் மீண்டும் 1991இல் இணைந்து கொண்டனர்.

பின்னர் 1965இல் 'சர்வதேச கிரிக்கெற் சபை' எனப் பெயர் மாற்றப்பட்டு பிரித்தானிய பொதுநலவாயத்திற்கு வெளியேயுள்ள நாடுகளும் இணைய வழிபிறந்தது.

இதனால் ஒரு வாக்கினைப் பிரயோகிக்கும் உரிமையுடைய இணைந்த உறுப்பினர்கள் கிடைத்தனர் . ஆரம்ப உறுப்பினர்களுக்கு 2 வாக்குகள் இருந்தன. அத்துடன் வீட்டோ (VETO) உரிமையும் இருந்தன.

1989இல் புதிய விதிகள் இயற்றப்பட்டு சபை கட்டுப்பாடுகளை விதிக்கும் அமைப்பாக பரிணமித்தது. 1993இல் அவுஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெற் சபைத் தலைவர் டேவிட் றிச்சாட்ஸ் (DAVID RICHARDS) தலைவராக நியமிக்கப்பட்டு, தலைமைச் செயலகம் லோர்ட்ஸ் கிரிக்கெற் மைதானத்தில் அமையப்பெற்றது.

### நோயல்

பின்னர் 2001இல் மல்கம் ஸ்பீட் (MALCOLM SPEED) பிரதான நிர்வாக அதிகாரியானார்.

இவர் கிரிக்கெற் சாதனையாளர்களை ஒன்றிணைத்து இன்று ஐ.ஸி.ஸியானது காத்திரமான ஒரு அமைப்பாகத் திகழ்வதற்கு உதவியுள்ளார்.

### ஐ.ஸி.ஸி தலைவர்களும் பிரதான நிறைவேற்று அதிகாரிகளும்

ஐ.ஸி.ஸியின் தற்போதைய தலைவராக பாகிஸ்தான் நாட்டைச்சேர்ந்த ஈசன் மானி (EHSAN MANI) கடந்த இரண்டு வருடங்களாக இருக்கிறார். இருந்தும் இவரின் பதவிக்காலம் கடந்த ஜுன் மாதத்துடன் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தற்போதைய பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் இரண்டாவது நிறைவேற்று அதிகாரியாகவும் மல்கம் ஸ்பீட் (MALCOLM SPEED) 2001ஆம் ஆண்டிலிருந்து பதவி வகிக்கின்றார்.

இதற்கு முன்னர் 1993 தொடக்கம் 2001 ஆம் ஆண்டுவரை டேவிட் றிச்சர்ட்ஸ் (DAVID RICHARDS) பதவிவகித்திருந்தார்.

(அடுத்த வாரம் தொடரும்...)

### தற்போதைய நிலவரம் (22.09.2005 வரை)


**டெஸ்ட் தரவரிசைப் பட்டியல்**

| அணி | போட்டிகள் | புள்ளிகள் | தரம் |
|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 39 | 4966 | 127 |
| இங்கிலாந்து | 38 | 4533 | 119 |
| இந்தியா | 30 | 3361 | 112 |
| தென்னாபிரிக்கா | 35 | 3517 | 100 |
| நியூஸிலாந்து | 26 | 2598 | 100 |
| இலங்கை | 27 | 2678 | 99 |
| பாகிஸ்தான் | 26 | 2474 | 95 |
| மேற்கிந்தியா | 32 | 2359 | 74 |
| சிம்பாப்வே | 21 | 563 | 27 |
| பங்களாதேஷ் | 28 | 146 | 05 |


**சர்வதேச ஒருநாள் தரவரிசைப் பட்டியல்**

| அணி | போட்டிகள் | புள்ளிகள் | தரம் |
|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 27 | 3672 | 136 |
| இலங்கை | 21 | 2574 | 123 |
| நியூசிலாந்து | 21 | 2444 | 116 |
| பாகிஸ்தான் | 29 | 3363 | 116 |
| தென்னாபிரிக்கா | 19 | 2117 | 111 |
| இங்கிலாந்து | 22 | 2389 | 109 |
| இந்தியா | 29 | 2810 | 97 |
| மேற்கிந்தியா | 22 | 1980 | 90 |
| சிம்பாப்வே | 23 | 1012 | 44 |
| பங்களாதேஷ் | 23 | 322 | 14 |

**ஐ.ஸி.ஸியின் தலைவர்கள்**



ஈசன் மானி (2003இலிருந்து)



மல்கம் கிறே (2000 - 2003)



ஜக்மோகன்டால்மியா (1997 - 2000)




சேர் கிளைடி வல்கெட் (1993-1997)



லோர்ட் கௌடிறே (1989-1993)

**ஐ.ஸி.ஸியின் நிறைவேற்று அதிகாரிகள்**



மல்கம் ஸ்பீட் (2001 இலிருந்து)



டேவிட் றிச்சர்ட்ஸ் (1993 - 2001)

# அடிக்கடி தடைப்படும் மின்சாரம்

(துன்னாலை)

குடாநாட்டில் உள்ள மின்விநியோகம் மாலை 7 மணி முதல் 9 மணிவரையான நேரப்பகுதியில் அடிக்கடி துண்டிக்கப்படுவதால் பொதுமக்கள் பெருஞ்சிரமத்துக்குள்ளாகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் மின்சாரத்தை வழங்கிவரும் தனியார் நிறுவனங்களின் மின்பிறப்பாக்கிகளில் சில பழுதடைந்ததாலும், அதிகளவில் சட்டவிரோத மின் இணைப்பு பெறுவோராலும் மின்விநியோகம் சீரற்று இருப்பதாக அறியப்படுகிறது.

தற்போது சட்டத்தை கையில் வைத்திருக்கும் அரச காவல்துறையினர் திருட்டு மின்சாரத்தை பெறுவோரை கண்டும் காணாதும் விடுவதே இம்மின்சாரத் திருட்டு அதிகரித்துள்ளமைக்கு காரணமென பலராலும் குறை கூறப்படுகிறது.

இது தொடர்பாக பிரதேச மின் அத்தியட்சகர்களுடன் தொடர்புகொண்டு கேட்டபோது தாம் திருட்டு மின்சாரம் பெறுவோரை கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த தமக்கு போதிய பாதுகாப்பு இல்லை என்பதே காரணம் எனவும் கூறுகின்றனர். (த-101)

# தேர்தல் சட்டம் கட்டாயமாகத் திருத்தி அமைக்கப்பட வேண்டும்
## பவ்ரல் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் தேர்தல் சட்டம் கட்டாயமாகத் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்று பவ்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்குப் பொருத்தமான தேர்தல் முறையொன்று குறித்து பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்ளும் முயற்சிகள் தற்போது தமது அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று இந்த அமைப்பின் சட்டத்தரணி புஜித அலுப்பட்ட பென்டிக்கே தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்கென பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசியலில் தேசிய மட்டத்திலும் பிராந்திய மட்டத்திலும் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படவேண்டும் என்று அலுப்பட்ட பென்டிக்கே யோசனை தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல்களில் ஒருவரின் பெயர் இரண்டு தரம் பதியப்படுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-7)

## நியமனம்

(சாவகச்சேரி)

வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவையின் கீழ் உள்ளூராட்சித் திணைக்களங்களில் வழங்கப்பட்டுள்ள நியமனங்களின் பிரகாரம் சாவகச்சேரி நகரசபையின் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் இருவர் நியமனம் பெற்றுள்ளனர்.

சண்முகநாதன் ஜெயகுமார் (பொது அபிவருத்தி) ,முருகையா சிவானந்தன் (நிதி) ஆகிய இருவருமே நியமனம் பெற்றோராவர். (த-21)

# 24 மணித்தியாலங்கள் செயற்படும் ஐ.தே.க வின் இணையத்தளம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதித் தேர்தலினை முன்னிட்டு 24 மணித்தியாலங்கள் செயற்படும் இணையத்தளம் ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளது.

**www.unpsrilanka.org** என்ற இணைய முகவரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்தளத்தில் உடனுக்குடன் செய்திகள், செய்தி வெளியீடுகள், புகைப்படங்கள் போன்ற தேர்தல் பிரசாரத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ் இணையத்தளத்தினை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய ஆரம்பித்து வைத்தார். (த-4)

# தேர்தல் பிரசாரம் மேற்கொள்வதை ஹெல உறுமய பிக்குமார் தவிர்ப்பு

(கொழும்பு)

தேர்தல் பிரசார மேடைகளில் உரையாற்றுவதைத் தவிர்த்துக்கொள்வதற்கு ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பிக்குமார் தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பிக்குகள் என்ற வகையில் அரசியல் மேடைகளில் ஏறி ஒவ்வொருவர் மீது சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது பொருத்தமல்ல. இன்று அரசியல் மேடைகள் உண்மைக்குப் புறம்பானவற்றை வெற்றியடையச் செய்வதற்கான நிலையிலேயே உள்ளன.

இதனால் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம் எனவும் எல்லாவெல மேதானந்த தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

# அரசியல்வாதிகளின் பாதுகாப்பை அதிகரிப்பதற்குத் தீர்மானம்

(கொழும்பு)

அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் அரசியல் பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு தமது இறுதி அறிக்கையைத் தயாரித்து வருகிறது.

இந்தக் குழுவிற்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் விக்ரர் பெரேரா தலைமை தாங்குகிறார். இந்தக்குழு அரசியல்வாதிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பையும் அதில் உள்ள குறைபாடுகளையும் ஆராய்ந்துள்ளது.

பாதுகாப்பை வலுப்படுததுவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அதில் கூறப்பட்டுள்ளது.

இறுதி அறிக்கை பாதுகாப்பு செயலாளரிடம் கையளிக்கப்படும். (த-7)

# அன்புள்ள அம்மா

13 சோதனையின் முடிவில் குழந்தைக்குப் பிரச்சினைகளெதுவும் இல்லை என வைத்தியர் உறுதிப்படுத்துவார்.

**மஞ்சட் காமாலை(Jaundice)**


குழந்தை பிறந்து முதற் கிழமையினுள் பெரும்பாலான (65%) வை உடல் மஞ்சள் நிறமடையும். இதற்குக் காரணம் குழந்தையின் ஈரல் முதிர்ச்சி அடையாமையே. இது பெரும்பாலும் 3ஆம் நாளளவில் ஆரம்பமாகிறது. அனேகமான வேளைகளில் இதனால் பிரச்சினைகள் வருவதில்லை. ஆனால் பிறந்து 1ஆம் நாளே மஞ்சள் நிறமாற்றம் ஏற்பட்டால் வைத்தியரை அணுகவேண்டும். குழந்தை பால் குடிக்காது விடல், அழுகையில் மாற்றம், தொடர்ந்து அழுதல் போன்றவை இருப்பின் வைத்தியரை நாடவும்.

## தாய்ப்பாலூட்டல்

**சிறப்புக்கள்**

தாய்ப்பாலிற்கு இணை இல்லை. தாய்ப் பாலூட்டுதல் தாயிற்கும் குழந்தைக்கும் சிறப்பானது மட்டுமன்றி இக்குழந்தை வளர்ந்து பெரியவரானாதும் ஏற்படும் நோய்கள் கூட தவிர்க்கப்படுகின்றனவாம்.

**தாய்ப்பாலின் சிறப்புக்கள்**



படம்:87

கீழாக இருக்குமாறு குழந்தையை அருகே கொண்டு வரவேண்டும்.

குழந்தை முலைக்காம்பை மட்டும் கவ்வி உறிஞ்சினால் பால்வராது. நோ ஏற்படும். எனவே முலைக்காம்பைச் சுற்றிய வட்டமான பகுதியில் குழந்தையின் தாடைகள் அமுக்கி தேங்கியுள்ள பாலை வெளிவரச் செய்யவேண்டும்.

சரியாக பாலூட்டப்படும் பொழுது குழந்தையின் வாய்கள் அகலத்திறந்து முலைக் காம்பையும், சுற்றியுள்ள வட்டப்பகுதி (Areola)வையும் உள்ளடக்கியிருக்கும்.

குழந்தை நன்கு பால்குடிக்கும் போது காதுகளும் கன்னப்பகுதியும் அசைவதைக் காணலாம்.

குழந்தை ஒருபக்கத்தில் பால் குடித்த பின் நித்திரைக்கு செல்லக்கூடும். அவ்வாறாயின் சிறிதுநேரம் கழித்து மறுபக்கத்தை ஊட்டலாம்.

குழந்தையை முலையிலிருந்து எடுக்கும பொழுது உங்கள் சின்ன விரலை வாயிற்குள் வைத்தல்மூலம் முலைக்காம்பு வலிப்பதைத் தடுத்கலாம்.

பாலூட்டி முடிந்ததும் குழந்தையை குழப்பத்தை உண்டு பண்ணும்.

குழந்தை பால்குடிக்கத் தொடங்கும்போது முதல் வரும் பால் நீர்த் தன்மையானது. பின்னர்தான் குழந்தைக்கு ஊட்டச்சத்தான பால் கிடைக்கும்.இதனால்தான் குழந்தை ஆகக் குறைந்தது 10-15 நிமிடங்கள் தொடர்ந்து ஒரு மார்பகத்தில் பால் குடிக்க வேண்டும்.

4ஆம் நாளளவில் சடுதியாக அதிகளவு பாலுற்பத்தியாவதால் மார்பகங்கள் நோகத் தொடங்கும்.சுடுநீர் ஒத்தடம் கொடுப்பதன் மூலமும், பாலூட்டுவதன் மூலமும் இந் நோய்



தானாகக் குறைவடையும்.

**பால்சுரப்பை அதிகரிப்பதெப்படி?**

போசாக்கான,சீரான புரத உணவுகள் இதற்கு அவசியம். சிறு மீன் இனங்களில் இவை அதிகமாக உள்ளன.பருப்பு, அவரை இனத தாவரங்களில் புரதம் நிறைய உள்ளது.

உடலில் நீரினளவும் பால் உற்பத்திக்கு அவசியமாதலால் தேவையான அளவு நீர், பழச்சாறு என்பன அருந்துதல் அவசியம். பாலூட்டுவது பெருமளவு கலோரி(சக்தி) இழப்பை ஏற்படுத்தும். எனவே அதிகளவு உணவு-விற்றமின்கள் நிறைந்த உணவு உட்கொள்ளப்படுவது அவசியமாகும்.

**குழந்தைக்கு பால் போதுமா?**

அநேகமான தாய்மாருக்கு இந்த சந்தேகம் எழும். குழந்தை அழும் வேளைகளிலெல்லாம் நீங்கள் பாலூட்டி வரும்போது (Demand feeding) குழந்தைக்கு எப்பொழுதும் போதுமான பால் கிடைக்கும்.குழந்தை அழுவதற்கு பசியை விட பல காரணங்கள் இருக்கலாம். குழந்தையின் நிறை சீராக அதிகரித்துச் செல்கின்றதாயின் பால் போதாது என்று நீங்கள் கவலையுறத் தேவையில்லை.

**தாய்ப்பாலூட்டலில் ஏற்படும் பிரச்சினைகள்**

**முலைக்காம்பில் புண்**

குழந்தையின் பாலூட்டும் முறை தவறானதாக-அதாவது குழந்தை முலையின் காம்பை கவ்வுவதால் இது ஏற்படலாம்.

புண் ஏற்படின் குறித்த பக்கத்தால் பாலூட்டுவதைத் தவிர்த்து பாலை கையால் வெளியேற்ற வேண்டும். கடும் வீக்கம், நோ, காய்ச்சல் ஏற்படின் வைத்தியரை நாடவும்.

## மகப்பேறின் பின் குடும்பத் திட்டமிடல்

மகப்பேற்றின் பின்னர் பாலூட்டும் தாய்மாருக்கு 3 மாதமளவிற்கு மீண்டும் குழந்தை தங்குவதில்லை. சிலருக்கு 3 மாதங்களிற்குள்ளாகவே மாதவிடாய்ச் சக்கரம் ஆரம்பிப்பதால் கருத்தரிக்கும் சாத்தியமுள்ளது.

பொதுவாக பிறந்த குழந்தைக்கு ஒரு வயது ஆகும் வரை கருத்தரிக்காமல் இருப்பது வளரும் குழந்தைக்கு அதிகளவு அக்கறை செலுத்த உதவும். எனவே அது வரை காலமும் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் பாவிக்கப்படலாம்.

**குடும்பக்கட்டுப்பாட்டு மாத்திரைகள்**

இதில் 2 வகைகள் உண்டு.பொதுவாக பாவிக்கும் முதலாவது வகை கூட்டு இன குளிகை (COMBINED PILLS) (மித்துரி) பாலூட்டும் தாய்மாருக்கு விரும்பத்தக்க தல்ல. ஏனெனில் இம் மாத்திரைகளில் உள்ள ஹோர்மோன்கள் பால் மூலம் குழந்தையை சென்றடைந்து பக்க விளைவுகளை ஏற்படுத் தக்கூடும். எனவே பாலூட்டும் தாய்மாருக் குரிய (PROGESTER ONE ONLY PILL) என்ற வகை மாத்திரைகள் பாவிக்கப்படலாம்.

**ஊசி மருந்துகள்**

DEPOT PROVERA எனப்படும் ஊசி மருந்து பாலூட்டும் தாய்மாருக்கு உகந்ததாகும். 3மாதங்களுக்கு ஒருமுறை போடப்படும் இவ்வூசி பக்கவிளைவுகள் குறைந்ததாகும் எனினும் இது சிலருக்கு தற்காலிகமாக மாதவிடாய் ஏற்படுவதை நிற்பாட்டக் கூடும்.

**லூப் முறைகள்(IUCD)**

கருப்பைக்குள் வைக்கப்படும் சிறிய கம்பி போன்றதொரு சாதனம் கருத்தரிப்பதைத் தடுக்கும். இதுவும் பாலூட்டும் தாய்மார் பாவிக்கக் கூடியதொரு முறையாகும் சிலருக்கு இது குருதிப்போக்கை அதிகரிக்கும் பிரச்சினைகள் கொடுக்கக் கூடும்.

**நிரந்தர கருத்தடை முறைகள**

ஆண், பெண் இருபாலாருக்கும் இதை செய்து கொள்ள முடியும் ஆண்களிற்கான நிரந்தரக் கருத்தடை முறை சிக்கல்கள் குறைந்ததும் இலகுவானதுமாகும்.

**வைத்திய கலாநிதி சி.நவநீதன்**



பெண்களிற்கான நிரந்தர கருத்தடையின போது பலோப்பியன் குழாய்கள் அடைக்கப்படுவதால் கருக்கட்டல் நிகழ் வதில்லை சிறு சத்திரசிகிச்சை மூலமோ அல்லது LAPARASCOPY எனப்படும் துளை மூலமான சத்திரசிகிச்சையாலோ இது செய்யப்படும்.

எத்தனை குழந்தைகளின் பின் நிரந்தர கருத்தடைச் சத்திர சிகிச்சை செய்யலாம் என நியதி எதுவுமில்லை. எனினும், தாயின் வயதையும், குழந்தைகளது எண்ணிக்கையையும் வயதையும் கருத்திற்கொண்டு வைத்தியர்கள சத்திரசிகிச்சையை சில காலங்களில் தள்ளிப்போடுமாறு ஆலோசனை கூறக்கூடும்.

ஏனெனில் ஒருமுறை நிரந்தர கருத்தடை செய்தபின் அதை பழைய நிலைக்கு மாற்றுவது மிகவும் கடினமானதாகும

(தொடரும்)

**ஆரம்பகாலம்**

பாலூட்டுமிடம் வசதியானதாகவும், அமைதியானதாகவும் இருக்கவேண்டும். முதுகு நிமிர்ந்தவாறு அதேநேரம் முதுகில் சாய்வதற்கு உதவியாக கதிரையில் பின் பகுதி இருக்கவேண்டும். இது நாரிப்பிடிப்பு, கழுத்து உளைவைத் தவிர்க்கும். மடியில் தலையணை வைப்பது கழுத்தை அதிகமாக வளைப்பதைத் தவிர்க்கும்.

நன்கு பழகிய பின்னர் காலில், மடியில் வைத்தும் பாலூட்டலாம்.குழந்தை சற்று வளர்ந்த பின் தானே முலைக்காம்பை கண்டு பிடிக்கும் திறனுள்ளது.

எனினும், ஆரம்ப காலத்தில் முலைக்காம்பை குழந்தையின் வாயில் தடவுவதன் மூலம் அல்லது சில துளி பால்களை வாயில் விடுவதன் மூலம் குழந்தையை பரிச்சயப்படுத்தலாம்.

குழந்தையின் நாக்கு முலைக்காம்பிற்குக நிமிர்த்தி, முதுகில் தட்டி குழந்தை உள்ளிளுத்த காற்றை வெளியேற்றலாம். இதன்போது சிறு 'ஏப்பம'வெளிவரும்.

குழந்ை தனக்குத் தேவையான பாலை உட்கொண்ட பின்னர் நித்திரைக்குப் போகக் கூடும். குழந்தைக்கு பால்போதுமா? என கவலையுறத் தேவையில்லை.

முதற் சில நாட்களில் களிம்புப்பால் (Colostrum) உற்பத்தியாகும். இது புரதம நிறைந்த நோயெதிர்ப்புச் சக்தி கொண்ட உணவாகும். 4ஆம் நாளளவில் தேவை யான அளவு பால் உருவாகும்.

தொடக்க நாட்களில் 2-3மணிக்கொரு முறை பாலூட்ட வேண்டி இருக்கும். குழந் தையின் தேவைக்கேற்ப பாலுற்பத்தியும் அதிகரிக்கும். எனவே மாப்பால் ஊட்டுதல் இந்தப் பாலுற்பத்தியில்

# உயர்தர வகுப்பை நடத்த அனுமதிக்குக!

## அம்பன் அ.மி.த.க. பாடசாலை அபி. சங்கம் வலயக் கல்விப்பணிப்பாளரிடம் கோரிக்கை

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அம்பன் அ.மி.த.க. பாடசாலையில் க.பொ.த. உயர்தர வகுப்பை நடாத்துவதற்கு அனுமதி வழங்குமாறு மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இப்பாடசாலையில் கடந்த 2003ஆம் ஆண்டு முதல் க.பொ.த. உயர்தர கலைப் பிரிவு வகுப்பை ஆரம்பிப்பதற்கான தற்காலி அனுமதி வழங்கப்பட்டது.

2003ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர வகுப்பு கற்ற மாணவர்கள் இவ் வருடம் சித்திரை மாதத்தில் பரீட்சைக்கு தோற்றினார்கள். இம்மாணவர்கள் கற்பதற்கு தற்காலிக அனுமதியே வழங்கப்பட்டதால் இப்பாடசாலை ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாமல் இப் பிரதேசத்தில் உள்ள உடுத்துறை மகாவித்தியாலய மாணவர்களுடன் இணைக்கப்பட்டே பரீட்சைக்கு தோற்றினார்கள் .

இப் பரீட்சையில் தேற்றிய 15 மாணவர்களும் நல்ல பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.இந்நிலையில் 2004,2005 ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்கத் தொடங்கிய மாணவர்களும் உடுத்துறை மகாவித்தியாலய மாணவர்களுடன் இணைக்கப்பட்டே பரீட்சைக்கு தோற்ற வேண்டியுள்ளது.

இப் பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலை ஊடாக விண்ணப்பிப்பதற்கு வசதியாக இப் பாடசாலையில் உயர்தர வகுப்பை நடாத்துவதற்கு நிரந்தர அனுமதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுககுமாறு அக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-35)

## ஜனாதிபதி வேட்பாளர்கள் எட்டுப் பேர் போட்டி


(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு 8வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய சோசலிச கட்சியின் சார்பல் சிறிதுங்க ஜயசூரிய ஸ்ரீலங்கா தேசிய முன்னணியின் சார்பில் விமல் கீகஹனகே, புதிய இடதுசாரி முன்னணியின் சார்பில் சமில் ஜயனெத்தி, சோசலிச சமத்துவக் கட்சியின் சார்பில் விஜேடயஸ், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் ஏ.ஆர் அருள்பிரகாசம், முஸ்லிம் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் என 8 பேர் போட்டியிடவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சு)

# 'அ... ஆ...'

## திரை விமர்சனம்




பிரிந்த காதலர்களை அவர்களுடைய உணர்வுகளே எப்படி சேர்த்து வைக்கிறது என்பதைச் சொல்லும் வித்தியாசமான கதை.

சிவாவும் மதுவும் காதலர்கள். ஒரே வீட்டில் வாழும் அளவுக்கு நெருக்கம். சின்னச் சின்ன விஷயங்களுக்கும் மோதிக்கொள்கிறார்கள். காதலன் செலவுச் சுமையை குறைப்பதற்காக அவள் மற்றொரு வாலிபனுடன் சேர்ந்து ஹோட்டல் நடத்துகிறாள். அவளுடைய நடவடிக்கைகளை சிவா சந்தேகப்படுகிறான்.

தன்னுடைய சுதந்திரத்தில் அவன் தலையிடுவதாகக் கூறி அவள் கோபப்பட மோதல் வெடிக்கிறது. இருவரும் பிரிந்து விடுகிறார்கள். அவர்களுடைய மன உணர்வுகளே மனித உருவங்களாக வந்து இருவரையும் சேர்த்து வைக்கும் முயற்சியில் இறங்குகின்றன. இருவரும் இணைந்தார்களா... இடையில் நடந்த சுவையான சம்பவங்கள் என்ன என்பதே 'அன்பே ஆருயிரே'.

பத்திரிகையாளர் சிவாவாக எஸ்.ஜே.சூர்யா. செய்தி சேகரிப்பதை விட நிலாவின் பின்னால் சுற்றுவதே அதிகம். வழக்கம்போல நாயகியிடம் சூர்யா விதம் விதமாக சேட்டைகள் செய்கிறார். எல்லாக் குறும்புகளுமே கலகலப்பு. நிலாவின் மன உணர்வு அவருடைய உருவமாக வரும்போது



சூர்யா படும்பாடு கற்பனையின் அற்புதம். வித்தியாசமான சிந்தனை.

சூர்யாவின் காதலி மதுவாக புதுமுகம் நிலா. நீண்ட அனுபவம் உள்ளவர் போல வெளுத்து வாங்குகிறார். சூர்யாவின் விருப்பப்படி விதம் விதமாக வந்து ரசிகர்களுக்கு கவர்ச்சி விருந்து படைக்கிறார். காதலனை நினைத்து உருகும்போது... உருக வைக்கிறார். துறுதுறுவென்று தோன்றி பரவசப்படுத்துகிறார். பாடல் காட்சிகள் வித்தியாசம். டாக்டர் ஊர்வசியை சிவா படுத்தும்பாடு கலாட்டா.


எத்தனை கட்டுப்பாடுகள் வைத்தாலும் என் கருத்து இதுதான் என்று சூர்யா சாதித்திருக்கிறார். வழக்கமான சினிமாவில் இருந்து மாறுபட்டு புதிய கோணத்தில் கற்பனை குதிரையைத் தட்டி விட்டு அதில் ரசிகர்களையும் பயணம் செய்ய வைத்திருக்கிறார். அதற்கு ஏற்ப கதை திரைக்கதை வசனம் இயக்கம் தயா ரிப்பு அனைத்தையும் எஸ்.ஜே. சூர்யா கையில் எடுத்துக் கொண்டு அவர் பாணியில் எதைப்பற்றியும் கவலைப் படாமல் கதை சொல்லியிருக்கிறார்.

'....யாரிடமும் நூறு சத வீத முழுமை கிடையாது...' என்பது அனுபவித்து எழுதப்பட்ட வசனம்.


சந்தானம், மயில்சாமி கிச்சுக் கிச்சு மூட்டுகிறார்கள். எம்.என். நம்பியார், ஊர்வசி, சந்தான பாரதி, சிந்தூரி, பாண்டு கச்சிதம்.

ஏ.ஆர்.ரகுமான் இசையில் ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு சுவை. பின்னணி இசை முன்னணியில் நிற்கிறது. வாலியின் பாடல்கள் இளமைவேணு கமரா வண்ண ஜாலங்களின் கலவை. ரஜினி மகள் சவுந்தர்யா உருவாக்கிய 'கிராபிக்ஸ்' காட்சிகள் கதையைத் தூக்கி நிறுத்தும் பிரமாண்டத்தின் தூண்கள்.

'அ... ஆ...' வென்று வாயைத் திறந்து பொழுதைப் போக்கலாம்.



'ஆறு'
சூர்யா – திரிஷா



'அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது'
பரத் – மல்லிகா கபூர்

# விஜய்யின் தம்பியும் தந்தையும் நடிக்கும் 'இளமை'



விஜய்யின் தந்தையும் இயக்குநருமான எஸ்.ஏ.சந்திரசேகர் நீண்ட நாட்களுக்குப் பிறகு படம் முழுவதும் வருகிற ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

இந்தப் படத்தின் பெயர் 'இளமை', 'கற்க கசடற' படத்தில் நடித்த விஜய்யின் சகோதரர் விக்ராந்த் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக ஜனாவி நடிக்கிறார். (எம்.குமரன் சன் ஆஃப் மகாலஷ்மி படத்தில் 'ஜெயம்' ரவிக்குத் தங்கையாக நடித்தவர்)

படத்தின் ஸ்டில்களில் படத்தின் பெயருக்கேற்றவாறு எஸ்.ஏ.சந்திரசேகருக்கு இளமை ஊஞ்சலாடுகிறது. அடுத்து என்ன... முழு நேர நடிகராகப் போகிறீர்களா என்று கேட்டபோது...

'அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. பல படங்களில் நடிப்பதற்கு எனக்கு வாய்ப்புகள் வந்துகொண்டேதான் இருக்கிறது. ஆனால் விஜய்யின் கால்ஷீட்டைக் கவனிப்பது, அடுத்து எங்கள் சொந்தத் தயாரிப்பில் விஜய் நடிக்கும் 'ஆதி' படத்தின் வேலைகள் என்று தொடர்ந்து பிஸியாக உள்ளேன்.

இந்தப் படத்தின் டைரக்டர் கோபி, இந்தக் கதையில் நீங்கள்தான் நடிக்கவேண்டும் என்று என்னை ஆரம்பத்திலிருந்தே வற்புறுத்தி வந்தார். ஆனால் நான் ஒத்துக்கொள்ளவில்லை. ஒரே ஒருமுறை கதையைக் கேட்டுவிட்டு சொல்லுங்கள் என்று கூறி கதையையும் திரைக்கதையையும் சொன்னார். அதைக் கேட்டபிறகு இந்தக் கரக்டரில் நான்தான் நடிக்கவேண்டும் என்று உறுதியாக முடிவுசெய்துவிட்டேன். என்னுடைய சுபாவத்திற்கு ஏற்ற கரக்டர். நீங்களே பாருங்கள்... இந்தப் படத்துக்குப் பிறகு விக்ராந்த் சிறப்பாகப் பேசப்படுவார்' என்று கூறி முடித்தார்.

இப்படத்துக்கு இசை சுக்ரன் படத்துக்கு இசையமைத்த விஜய் ஆன்டனி. எடிட்டிங் – சுரேஷ் அர்ஸ். பாடல்கள் – சினேகன். தயாரிப்பு – ஐயப்பன். கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குபவர் கோபி.

# மீண்டும் சிலம்பரசன் ...

சிலம்பரசன் நடித்த 'குத்து' ப...
துரைராஜ் வழங்கும் தெய்வானை ...
பிரமாண்டமான புதிய படம் 'சர...
படத்தின் வெற்றிக்குப் பிறகு மீ...
யாக ஜோதிகா நடிக்கிறார்.

மற்றும் பிரகாஷ்ராஜ், நாகேஷ், ...
டின்ட்டுடாம் நடிக்கின்றனர். மே...
இணைந்து 'சர்க்கார்' என்ற ஹிந்தி...
காளை என்பவர் வில்லனாக அறி...

ஸ்ரீகாந்த் தேவா இசையில் ...
பா.விஜய் பாடல்களை எழுதுகின்றன...
பதிவு செய்கிறார். கே.தணிகாசல...
கிறார். ...
கிறார். ...
பயிற்சி...

# சினிமாச் சிதறல்



'மது'
பிரியாமணி

# ஆரோக்கியமான போட்டி...



இளம் ஹீரோக்க...
போட்டி இருந்த வே...
ஒன்று. அப்போது...
வெளிப்படுத்த முடியும...
நான் சினிமா உ...
கத்தைப் பெற்று இருக்...
உழைத்து வருகிறேன். இதுவரை எனது பட...
டர்கள் எனக்கு மிகவும் உதவியாக இருந்ததா...
வுக்கு செய்து இருக்கிறேன்.

தொடர்ந்து சிறப்பாகச் செய்ய வேண்டும் என...
மாகும் என்றும் ஆர்யா கூறியுள்ளார்.

# அண்ணியாக நடிக்க...

இன்னமும் இளம் கதாநாயகர்களுக்கு ஜோ...
என்று துடிக்கிறார் மீனா. அப்படிப்பட்ட அவ...
துக்கு அண்ணியாக நடிக்கிறீர்களா?" என்றால்...

சமீபத்தில் ஸ்ரீகாந்த் நடிக்கும் ஒரு புதிய பட...
யாக நடிக்குமாறு கேட்ட ...வினாடியே "முடி...
மாகச் சொல்லிவிட்டாராம் மீனா!

கஸ்தூரிராஜா புதுமுகங்களை வைத்...
காதல் வரும் பருவம்' படத்தில் தனுஷ் ...
நடிக்கிறார்.

## ...லம்பரசன் ஜோடியாக ஜோதிகா

...ா நடித்த 'குத்து' படத்தைத் தயாரித்த அமுதா ...ங்கும் தெய்வானை மூவி மேக்கர்ஸ் தயாரிக்கும் ...ன புதிய படம் 'சரவணா'. இதில் 'மன்மதன்' ...ற்றிக்குப் பிறகு மீண்டும் சிலம்பரசன் ஜோடி ...ா நடிக்கிறார்.

...ாஷ்ராஜ், நாகேஷ், மேக்னா நாயுடு, கிருஷ்ணா, ...டிக்கின்றனர். மேலும், அமிதாப்பச்சனுடன் ...க்கார்' என்ற ஹிந்திப் படத்தில் நடித்துள்ள ரவி ...ர் வில்லனாக அறிமுகமாகிறார்.

...தவு... இசையில் வாலி, நா.முத்துக்குமார், ...ல்க... எழுதுகிறனர். ஆர்தர் ஏ.வில்சன் ஒளிப் ...ார். கே.தணிகாசலம் படத்தொகுப்பு கவனிக்கிறார். மணிராஜ் அரங்கம் அமைக்கிறார். கனல் கண்ணன் சண்டைப் பயிற்சி அளிக்கிறார்.

துரைராஜ், கே.சி.என்.சந்திரசேகர் இணைந்து தயாரிக்கின்றனர். திரைக்கதை, வசனம எழுதி கே.எஸ்.ரவிகுமார் இயக்குகிறார்.



'சண்டக் கோழி'
விஷால் – மீராஜாஸ்மின்

## 'தசாவதாரம்' படத்தில் கமல் ஜோடியாக அசின், புதுமுகம் வித்யா

ரஜினியின் புதிய படமான 'சிவாஜி' போலவே கமல் நடிக்க இருக்கும் 'தசாவதாரம்' படமும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. கமல் 10 வேடங்களில் வந்து அசத்தப் போகும் இந்தப் படத்தை கே.எஸ்.ரவிக்குமார் இயக்குகிறார்.

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் 9 வேடங்களில் நடித்த 'நவராத்திரி' படம் அவரது சாதனையில் மைல் கல்லாகவும் சிவாஜியின் திறமைக்கு மேலும் பெருமை சேர்ப்பதாகவும் இருந்தது. மிகப்பெரிய வெற்றிப் படமாகவும் அது அமைந்தது.

இன்று நடிப்புலகில் தனக்கென்று தனி பாணியை அமைத்துக்கொண்டு, அதற்காக தன்னையே வருத்தி புதுப்புது அவதாரங்களை எடுத்து கொண்டிருப்பவர் கமலஹாசன். தமிழ்த் திரையுலகில் சிவாஜிக்குப் பிறகு நடிப்பில் சவால் விடும் சாதனைகளை செய்து வருகிறார். வெற்றி தோல்விகளைப் பற்றி கவலைப்படாமல் படத்துக்குப் படம் புதுமைகளைப் புகுத்துவதில் கமலுக்கு நிகர் கமல்தான்.

'வேட்டையாடு விளையாடு' படத்துக்குப் பிறகு கமல் நடிக்க இருக்கும் 'தசாவதாரம்' வித்தியாசமான கதையாக உருவாக இருக்கிறது. இதில் 10 விதமான கெட் – அப்புகளில் வரும் கமல் வித்தியாசமான நடிப்பால் அசத்த முடிவு செய்திருக்கிறார்.

இந்தப் படத்தில் வரும் 10 கமல்களில் வயதான கமலும் உண்டு. இளைஞரும் நடுத்தர வயதுக்காரரும் இருக்கிறார்கள். உடல் ஊனமுற்ற ஒரு கமலையும் பெண் வேடமிட்ட கமலையும் புகுத்துவது பற்றி ஆலோசனை நடந்து வருகிறது. நகைச்சுவை கலந்த கலகலப்பான கதை ஒன்று இதற்காக தயாராகி வருகிறது. வெளிநாட்டில் இருந்து மேக்கப் நிபுணர்களை வரவழைத்து கமலை கன்னாபின்னா வென்று மாற்றத் திட்டமிட்டுள்ளனர்.



மொத்தம் உள்ள 10 கமல்களில் 5 பேருக்கு ஜோடியாக நடிக்க நடிகைகளைத் தேடி வந்தனர். இதில் ஒரு கமலுக்கு ஜோடியாக அசின் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இவருக்குக் கலகலப்பான வேடம். மற்றொரு கமல் ஜோடியாக நடிப்பதற்கு புதுமுக நடிகை வித்யா பாலன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இருவரும் கேரளாவைச் சேர்ந்தவர் என்றாலும் இவர் பிறந்து வளர்ந்தது எல்லாம் மும்பையில்தான். 30க்கும் மேற்பட்ட விளம்பர படங்களில் நடித்துள்ள இவர் 'பரினிதா' என்ற ஹிந்திப் படத்திலும் அறிமுகமாகி இருக்கிறார். இதற்குப் பிறகு பல படங்களில் நடிக்க வித்யாவுக்கு வாய்ப்புக்கள் வந்து குவிந்துள்ளன.

இதற்கிடையே கமல் படத்தில் நடிக்க கிடைத்த வாய்ப்பு வித்யா பாலனை மிகவும் மகிழ்ச்சி அடைய வைத்திருக்கிறது. கமலுக்கு ஈடு கொடுத்து நடிக்க முயற்சி செய்வேன் அவருடன் ஜோடி சேருவது என் அதிர்ஷ்டம் என்கிறார் அவர். அசின், வித்யா தவிர மேலும் 3 நடிகைகளை கமலுடன் ஜோடியாக நடிக்க வைப்பதற்காக தேடுகிறார்கள். யாருக்கு அதிர்ஷ்டம் அடிக்கப் போகிறதோ?–

## 1 கோடியை நெருங்கும் திரிஷா


நடிகை திரிஷாவின் சம்பளம் ஒரு கோடியை எட்டிக்கொண்டிருக்கிறது.



அந்தக் காலத்தில் மிக அதிக சம்பளமாக ஒரு இலட்சம் பெற்றவர் கே.பி. சுந்தராம்பாள். அந்த சாதனையை பல ஆண்டுகளாக எந்த நடிகையாலும் தகர்க்க முடியாமல் இருந்தது. அதுவொரு காலம்! இப்போது சில நடிகைகளுக்கு இலட்சக்கணக்கில் சம்பளம் பெறுவது தான் கௌரவம் என்ற நிலை. அந்த மொழியில் என்க்கு மார்க்கெட், இந்த மொழியில் எனக்கு மார்க்கெட் என்று தங்களது சம்பளத்தை நியாயப்படுத்தவும் தவறுவதில்லை.

திருமணம் முடிந்து சிம்ரன் சென்ற பிறகு ஜோதிகாவின் கை ஓங்கியது. 30, 40 என்று லகர வரிசையில் அவரது சம்பளம் உயர்ந்தது. அந்தச் சமயத்தில் அதிரடியாக நுழைந்தார் திரிஷா. விஜய்யுடன் ஜோடி சேர்ந்த 'கில்லி' 'திருப்பாச்சி' போன்ற படங்கள் சூப்பர் சூப்பர் ஹிட் ஆனது. 'எனக்கு 20 உனக்கு 18' உட்பட தெலுங்கில் வெளிவந்த இன்னும் சில படங்கள் திரிஷாவை 'முன்னணிக்கு' தூக்கிச் சென்றது. அங்கு அவர் பெறுவது 80 லகரமாம். தமிழுக்கு 45 லகரம் கேட்கிறார்.

இன்னும் 2 படம் சூப்பர் ஹிட்டாக ஓடினால் இவரின் சம்பளம் 1 கோடியை எட்டிவிட வாய்ப்புள்ளதாக சினிமா வட்டாரத்தில் பேசப்படுகிறது.



னி



'அகரம்'
நந்தா – அர்ச்சனா

## சுந்தர்.சி ஹீரோவாக அறிமுகம்

ஏற்கனவே இராம நாராயணன் கேட்டபோது நடிக்க மாட்டேன் என்று மறுத்தவர் குஷ்புவின் கணவர் சுந்தர்.சி. தொடர்ந்து டைரக்ஷன் துறையிலேயே காலத்தை ஓட்டிக்கொணடிருந்த அவர், திடீர் ஞானோதயம் பெற்றுள்ளார்.

ஆமாம், அவருக்கும் ஹரோ ஆசை வந்துள்ளது! குஷ்பு தயாரிப்பில அவர் கதாநாயகனாக நடிக்கும் படத்துக்கான அறிவிப்பு வெகுவிரைவில் வெளியாகவிருக்கிறது. சுந்தர்.சி ஜோடியாக நடிக்க மும்பை வாழ் கதநாயகி வேட்டை நடக்கிறது. யாருக்கு வாய்ப்பு கிடைக்குமோ...?

## ...வ போட்டி அவசியமே! –ஆர்யா

இளம் ஹீரோக்களிடம் ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டியது அவசியமான ஒன்று. அப்போதுதான் சிறந்த நடிப்பை வெளிப்படுத்த முடியும என்கிறார் நடிகர் ஆர்யா.

நான் சினிமா உலகில் நல்ல தொடக்கத்தைப் பெற்று இருக்கிறேன். நான் கடுமையாக ...துவரை எனது படத்தை இயக்கிய டைரக ...தவியாக இருந்ததால்தான் நான் இந்த அள ...றேன்.

... செய்ய வேண்டும் என்பதே எனது ஒரே திட்ட ...றியுள்ளார்.



'இதய திருடன்'
ஜெயம் ரவி – காம்னா

## ...க நடிக்க மறுத்தார்

...நாயகர்களுக்கு ஜோடியாக நடிக்கவேண்டும் ... அப்படிப்பட்ட அவரிடம் சென்று, "ஸ்ரீகாந் ...கிறீர்களா?" என்றால், கோபப்பட மாட்டாரா? ...டிக்கும் ஒரு புதிய படத்தில், அவரது அண்ணி ...வினாக "முடியாது" என்று தீர்மான ...ம் ...ண்ணா!

...கங்களை வைத்து தயாரிக்கும் 'இது ...' படத்தில் தனுஷ் சிறப்பு வேடத்தில் நடிக்கிறார்.

நயன்தாரா, அஸின் ஆகியோரின் கால்ஷீட் கிடைக்காத வர்கள், 'மழை' படத்தில் நடிக்கும் ஸ்ரேயா கால்ஷீட்டுக்கு அலையோ அலையென்று அலைகிறார்கள்! விஷயத்தை மிகவும் லேட்டாகப் புரிந்துகொண்ட ஸ்ரேயா, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள முடிவுசெய்து, ஒரு படத்தில் நடிக்க 25 லகரங்கள் சம்பளம் கேட்கி றாராம்! இதில் ஒரு பைசா குறைந்தால்கூட கால்ஷீட் தரமாட்டாராம்!

* * *

'மனதை திருடிவிட்டாய' பட டைரக்டர் நரேன் தெய்வநாயகம் இயக்கும் புதிய படத்தின் பெயர் 'ஒரு பொண்ணு ஒரு பையன்'.

* * *

'மதராஸி' படத்தைத் தயாரித்துவரும சுபாசந்தீப் தொடர்ந்து தமிழில் 6 படங்களை தயாரித்து வெளியிட திட்டமிட்டுள்ளார்.

# தென்னிலங்கையின் அண்மைக்கால அரசியல் நகர்வுகள் இராணுவ வழித் தீர்வுக்கான முயற்சிகளாகவே உள்ளன

## புட்டு புட்டு வைக்கிறது 'தமிழ் கார்டியன்'

(இலண்டன்)

**தென்னிலங்கையின் அரசியல் நிகழ்வுகளும் சிங்களத் தீவிரவாதிகளும் யுத்தத்தைத் தூண்டும் வகையில் செயல்பட்டு வருவதாக இலண்டனிலிருந்து வெளியாகும் தமிழ் கார்டியன் நேற்று முன் தினம் தனது தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.**

இது விடயம் தொடர்பில் 'தமிழ் கார்டியன்' தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஜப்பான்,நோர்வே ஆகிய நாடுகள் இலங்கைத் தீவின் அமைதி முயற்சிகள் தொடர்பாக இவ் வாரம் விரிவாக ஆராந்துள்ளன.

2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏறபட்டது முதல் தற்போதுதான் மிகவும ஆபத்தான நிலையை ஒப்பந்தம் எதிர்நோக்கி உள்ளதாகவும் அந்த நாடுகள் கவலை தெரிவித்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை கூட்டப்பட்ட இவ் இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் அண்மைய வன்முறைச் சம்பவங்கள் குறித்த விவாதமே முதன்மையாக இடம்பெற்றது. இவ வன்முறைகள் தொடர்பாக அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் இணைத் தலைமை நாடுகள் விமர்சித்துள்ளன.

குறிப்பாக வெளி வவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை மற்றும் அது தொடர்பிலான அரசியல் நிகழ்வுகள் குறித்து அக் கூட்டத்தில் பிரதானமாக விவாதிக கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் இடம்பெறும் வன்முறைகள் குறித்த சர்வதே சமூகத்தின் உணர்வுகள் புரிந்துகொள்ளத்தக்கதே.தமிழ்த் துணைபடையிடமிருந்து ஆயுதங்களைக் களைந்து யுத்த நிறுத்தத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று இணைத தலைமை நாடுகள் வலியுறுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடரச் செய்வதற்காக முக்கியமான வலியுறுத்தல் இது.

தமிழீழ விடுதலைப் புலிகளும் தற்போது கூட அரசுடன் உடனடிப் பேச்சுக்களுக்கு தாங்கள் தயார் என்று அறிவித்துள்ளனர்.

பாதுகாப் புகளைக் கருத்தில் கொண்டு தங்களது நிர்வா கப் பகுதியிலோ நடுநிலைமை நாடு ஒன்றிலோ இப் பேச்சுக்கள் நடாத்தப்பட வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர். ஆயுதக் குழுக்களை அரசு களைய வேண்டும் என்று இணைத் தலைமை நாடுகள் கூறியிருப் பதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு குறித்த கவலையை அந்நாடுகள் புரிந்து கொண்டிருக்கக் கூடும்.

நடுநிலைமை நாடு ஒன்றில் பேச்சுக்களை நடாத்துவதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைத்து விடும் எனக் கூறி இப் பேச்சுக்களிலிருந்து அரசு விலகிக் கொள்ள முயற்சிக்கிறது இது சிறு பிள்ளைத்தனமானதும் கபடத்தனமானது மாகும்.

அமைதி முயற்சிகளில் இரு பங்கேற்பாளர்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் இன்னொரு பக்க பங்கேற்பாளராக இருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் கிடைத்துவிடுமோ என்ற சந்தேகத்துடன் அரசு இருப்பது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சிதைப்பதாகும்.அப்படியான நிலையில் அமைதிப் பேச்சுகள் மீதோ அரசியல் வழி தீர்விலோ எப்படி நம்பிக்கை வரும்?

அமைதிப் பேச்சுகள் தொடர்பான இத்தகைய குழப்பங்கள் நீடிக்கின்ற நிலையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் ஆயுட்காலம் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலை என்ன என்பது அடிப்படையான விடயம்.

வடக்கு-கிழக்கில் உள்ள துணைப்படை ஆயுதக் குழுக்களை களைந்துவிடுவதால் மட்டுமே வன்முறைகள் நின்றுவிடப் போவதில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தத்தை அரசு வளர்த்தெடுககும் வரையில் இரு தரப்பினரும் எதிர எதிரே பேச்சு மேசையில் அமர்ந்து பேசினாலும எந்தத் தீர்வையும் எட்டிவிட முடியாது.

இரு தரப்பினரும் அடுத்த மாதம் நோர்வே விசேட தூதுவர் ட்ரொண்ட் புறூவ் ஹொவ்டேயுடன் பேச்சுக்களை நடாத்த உள்ளனர். ஆயுதக் குழுக்களுக்கான இராணுவத்தினரின் இம் மறைமுக ஆதரவு தொடர்பான விவாதத்தை விரும்பாத நிலையில்தான் பேச்சுக்களுக்கான இடம் குறித்த குழப்பத்தை அரசு உருவாக்கி வருகிறது.

ஆகையால் சர்வதேச சமூகமானது அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டும என்று பாரிய அழுத்தம் கொடுத்து முழு அளவில் அதைச் செயற்படுத்த வைக்கவேண்டும.

சர்வதேச சமூகத்தின் சமாதான முன்னெடுபபுகளை மீறி அரசியல் நிகழ்வுகள் சென்று கொண்டிருக்கின்றன. சிங்களத் தீவிரவாதிகள் தென்னிலங்கையின் பிரதான அரசியல் சக்திகளாக உருவெடுத்துள்ளனர். இலங்கையின் சிறுபான்மை சமூகத்தினரும் சர்வதே சமூகத்தினரும் அமைதி முயர்சிகளின் எதிர் நிலைக்குத் தள்ளப் பட்டுக் கொண்டிருக்கிறாகள்.

இலங்கை இனப்பிரச்சினைக்குக் கூட்டாட்சி மூலமே தீர்வுகாண முடியும் என்று இணைத் தலைமை நாடுகள் வலியுறுத்தியுள்ளன. ஆனால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ நாட்டைப் பிளவுபடுத்த அனுமதிக்கமாட்டோம் என்றே கூறிவருகிறார்.

சர்வதே நாடு களாலும் சிறுபான்மை மக்களாலும் கூறப்பட்டு வருகின்ற கூட்டமைப்பு முறையிலான தீர்வு என்பது நாட்டைப் பிளவுபடுத்துகின்ற விடயம் இல்லை. ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை உதாசீனப்படுத்தி வருகின்ற நிகழ்வானது அமைதி முயற்சிகளின் ஒவ்வொரு நகர்விலும் தாக்கத்தையே ஏற்படுத்தும்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு சிறிதளவுதான் உதவிகள் சென்றடைந்துள்ளன. ஆனால் தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் பாரிய இலாபம் கிடைத்துள்ளது. சர்வதேச உதவிகளால் மட்டுமல்ல மறைமுகமாக பாரிய அந்நிய முதலீடுகள் மூலமும் இலங்கை அரசாங்கம் பலனடைந்துள்ளது என்பதே உண்மை.

இதனிடையே தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தம் காலத்தில் தங்களது ஆயுத பலத்தை அதிகரித்துக் கொண்டதாக தீவிரவாத இயக்கமான ஜாதிக ஹெல உறுமய மீண்டும் கூறியுள்ளது.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் விடுதலைப் புலிகளின் பலம குறித்து தவறாக மதிப்பிட்டு வைத்துள்ளனர். போரை நடாத்தினால வெற்றி பெறுவோம் என்று வாதிட்டு வருகின்றனர்.

இராணுவ வழித் தீர்வுக்கான முயற்சிகளை மீண்டும் இலங்கை மேற்கொள்வது நிச்சயமாக நிகழக் கூடியதாக இருக்கும் என்பதையே இவை காட்டுகின்றன என்று அத் தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டுளளது. (ற-4)

# 'தமிழ் இனவாதியாக அடையாளம் காட்டாமல் இலங்கையன் என்று பெருமை கண்டவர்'

## கதிர்காமரை புகழ்கிறார் விமல் வீரவன்ஸ

(கொழும்பு)

1983ஆம் ஆண்டு இனப் படுகொலைகளின போதும் தன்னை தமிழராகக் காட்டிக் கொள்வதை விட இலங்கையனாகவே லக்ஷ்மன கதிர்காமர் காட்டிக்கொண்டார் என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலளர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கதிர்காமரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையில் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக காப்பாற்றியவர் அமைச்சர் கதிர்காமர் வரலாறறின சிறைக் கைதியாக இருக்க விரும்பாதவா. நாட்டை இரண்டாகப் பிரிக்கும் சித்தாந்தம் கொண்ட குழுவினரின் பிடியில் இருந்து விடுபட்டு வாழ்ந்தார்.

அவர் தன்னை ஒரு தமிழ் இனவாதியாக அடையாளம் காட்டிக்கொள்ளாமல் ஓர் இலங்கையன் என்று கூறுவதில் பெருமை கண்டவர்.

1983ஆம் ஆண்டில் நட்த்தப்பட்ட இனப் படுகொலைகளின் போதும் அவர் இந்த நிலையில் இருந்து புரளவில்லை. தான் ஒரு தமிழராக இருந்துகொண்டு ஐக்கிய இலங்கை ஒன்றுபட்ட நாடு என்ற கொள்கையில் உறுதியாக இருந்தார்.

அதுவே அவருடைய உயிருக்கு அச்சுறுத்தலாகவும் அமைந்தது. ஆனால் அவர் தனக்கு ஏற்பட்டுள்ள உயிர் ஆபத்தையும துச்சமாகக கருதித் துணிச்சலுடன் தொடர்ந்து செயறபட்டார். சந்திரிகாவின் பிறந்தநாள் தொடர்பான கட்டுரை ஒன்றில் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்களையும் துணிச்சலுடன் விமர்சனம் செய்தவர்.

இதன்மூலம் தாம் எவருக்கும் தலை வணங்காதவர் என்பதை அவர் உறுதிப்படுத்திவிட்டார்.

சர்வதேச மட்டத்தில் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டதற்கும் துணை நின்றவர். இது புலிகள் இயக்கத்திற்கு கிடைத்த ஒரு தோல்வியேயன்றி வெற்றி அல்ல.

கதிர்காமர் சிறுபான்மை இனத்தவராக இருந்தபோதும் அவரை இந்த நாட்டின் பிரதமராக்க முயற்சித்தோம்.ஆனால் அது முடியாமல் போய்விட்டது. ஆனால் கதிர்காமருக்கு பிரதமர் பதவியை விட உயாந்த பதவி ஒன்றையே வழங்கியிருக்க வேண்டும் என்பதை இப்போது உணர்கின்றோம் என விமல வீரவன்ஸ தெரிவித்தார். (ற-4)

# தொண்டர்களை சிற்றூழியர்களாகச் சேர்த்து கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றுபவர்களை சிற்றூழியர்களாக சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 4ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

722 தொண்டர்களுக்குச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக அந்தந்தப் பிரதேசத்தில் குறிப்பிட்ட திகதிகளில்,குறிப்பிட்ட நிலையங்களில் நேர்முகப் பரீட்சை நடைபெறுமென யாழ்ப்பாண பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய காலநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

1.பருத்தித்துறை- 28.09.2005 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை.

2.மானிப்பாய்- 29.09.2005 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்.

3.தெல்லிப்பளை- 01.10.2005 சுன்னாகம் பொது நூலகம்.

4.கோப்பாய் - 02.10.2005 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்.

5.ஊர்காவற்றுறை-03.10.2005 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, ஊர்காவற்றுறை.

6 சாவகச்சேரி - 04.10.2005 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,சாவகச்சேரி.

7.யாழ்ப்பாணம் - 04.10.2005 சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்.

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கான அனுமதிக கடிதங்கள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் வழங்கப்படுகின்றன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# மஹிந்தவுக்கான வாக்குகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் பட்ஜெட்

(கொழும்பு)

தேர்தலுக்கு அண்மித்த வரவு செலவுத் திட்ட அறிவிப்பின் ஊடாக பிரதமர் வாக்குகளை சேர்க்கும் முயற்சியில் ஈடுபடத் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2006ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட யோசனைகளை நிதியமைச்சர் நவம்பர் மாதம் 8ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளார்.

அது தொடர்பான திட்ட மதிப்பீடு அடுத்த மாதம் 4ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அடுத்த வருடம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அரசாங்கம் கூடுதலான நிதியினை ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்ததனையடுததே இவ் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

நவம்பர் மாதம் 17ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் 9 நாடகளுக்கு முன் இவ் வரவு செலவுத்திட்ட அறிவிபபு வெளிவருவது வாக்குகளில் தாக்கத்தினை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகின்றது. (ற-4)

# பொங்குதமிழ் ஏற்பாடுகள் தீவிரம்

(திருநெல்வேலி)

எதிர்வரும் 30ஆம் திகதி குடாநாட்டில் இடம்பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வினை உணர்வுபூர்வமாக நடத்துவதற்கு யாழ். சமூகம் தயாராகி வருகிறது.

இம்முறை குடாநாட்டில் இடம்பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் மூன்று இலட்சத்திறகும் மேற்பட்ட மக்கள் அணிதிரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, பொங்குதமிழ் பானையும் ஊர் ஊராக எடுத்துச் செல்லப்படவுள்ளது. பொங்கு தமிழ் தொடர்பான விழிப்பூட்டல் நடவடிக்கைகளும் குடாநாட்டில் வேகமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-43)

# சிறந்த தலைமைத்துவம் ஒன்றே மக்களின் தேவையாகவுள்ளது

## -கரு ஜெயசூரிய

(கொழும்பு)

சிறந்த ஜனாதிபதி ஒருவரை நியமிப்பதே தற்போது நாட்டு மக்களின் தேவைப்பாடாக வுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தெரிவித்துளளார்.

நேர்மையான தீர்மானங்களை எடுக்கக் கூடிய தலைவர் ஒருவரை இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தெரிவு செய்ய வேண்டியது அவசியம் என ஐ.தே.கவின் ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ இணையத் தளத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே கருஜெயசூரிய இதனைத் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்படும் தலைவரால் மட்டுமே நாட்டில் ஒழுங்கான முறையில் வேலை செய்ய முடியும் சில நாடுகள் வீழ்ச்சியடைந்த போது அவற்றைக் கட்டியெழுப்ப தலைவர்கள் உருவானார்கள்.

அவ்வாறானதொரு தலைமையின் கீழ் சிறந்த முகமைத்துவம் ஒன்றும் இக் காலத்தில் தேவைப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# கடும் மழையுடன் சுழன்றடித்தது 'ரீட்டா' அமெ.நகரங்களுள் புகுந்தது வெள்ளம்

## 30 இராட்சத அலைகள் தடுப்புச்சுவரை தாண்டின உயிரிழப்பு சேத விபரம் வெளியாகவில்லை

(நியூஆர்லியன்ஸ்)

அமெரிக்காவின் லூசியானா,புளோரிடா,அலபாமா, மிசிசிப்பி ஆகிய மாகாணங்களை கத்ரீனா சூறாவளி கடந்த மாதம் தாக்கியது. 10ஆயிரம் பேர் இதில் பலியாகிவிட்டனர். நியூஆர்லியன்ஸ் நகரம்தான் இதில் பெருமளவு பாதிக்கப்பட்டது.



ஹுக்கிம் நகர கடற்கரையை நோக்கி ரீட்டா சூறாவளி நெருங்குவதைக் காட்டும் வகையில் கோமரேன் கடலோரப் பகுதியில் அடுக்குகளாக நுரையுடன் புறப்படும் அலைகள்.

இந்த நிலையில் அமெரிக்காவை நோக்கி 'ரீட்டா' எனும் மற்றொரு சூறாவளி நெருங்கி வந்தது. டெக்சாஸ் மாநிலம் ஹுஸ்டன் கல்லெஸ்டன் ஆகிய நகரங்களை இது கடுமையாகத் தாக்கும் என்று அறிவிக்கப்பட்டது.


இதைத்தொடர்ந்து டெக்சாஸ் மாநிலத்தில் இருந்து 13 இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் பாதுகாப்பான இடத்துக்கு வெளியேற்றப்பட்டனர்.

இந்த நிலையில் ரீட்டா சூறாவளி சற்று திசை மாறியதுடன அதன் வலுவும் சற்றுக் குறைந்தது சூறாவளி சற்று வலு இழந்தாலும் ஆபத்து நீங்கியபாடில்லை.

சூறாவளி திசை மாறியதைத் தொடர்ந்து கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. முன்பு சூறாவளி தாக்கி நியூஆர்லியன்ஸ் நகரை ஒட்டியுள்ள பகுதியில் பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. மணிக்கு 225கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசியது.

நியூஆர்லியன்ஸ் கடலோரப் பகுதியில் 30அடி உயரத்துக்கு தடுப்புச் சுவர் கட்டப்பட்டு இருந்தது. இந்த தடுப்புச்சுவரை தாண்டி வந்து இராட்சத அலைகள் நியூஆர்லியன்ஸ் நகரை தாக்கியது.

இந்த நகருக்குள்ளும் அதன் அருகே இன்னொரு நகரிலும் கடல் நீர் புகுந்தது.இதில் எத்தனை பேர் பலியானார்கள் என்று உடனடியாக தகவல் இல்லை. ஆனாலும் உயிரிழப்பு குறைவாகவே இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற)





ரீட்டா சூறாவளி தாக்கும் முன்பாக டெக்சாஸ் மாநிலத்திலிருந்து வெளியேறுவதற்காக விமான நிலையத்தில் முண்டியடித்துக் காத்திருப்போரை முதலாவது படத்திலும் மருத்துவ விமானத்தில் டல்லாஸில் வந்து இறங்குவோரை மறுபடத்திலும் காணலாம்.

'ரீட்டா' சூறாவளி பாதையில்

# வெற்றிவிழா ஊர்வலத்தில் குண்டுவெடிப்பு பாலஸ்தீனத்தில் 19 பேர் உடல் சிதறிப் பலி!

## சுமார் 60 பேர் வரை படுகாயம்

(காஸா)

பாலஸ்தீன வெற்றிவிழா ஊர்வலத்தில் குண்டுவெடித்து 19 பேர் ஸ்தலத்திலேயே உடல் சிதறிப் பலியாகியுள்ளதுடன் சுமார் 60ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையே நீண்ட நாட்களாக இருந்து வந்த மோதலைப் முடிவுக்குக் கொண்டுவர சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் ஒரு பகுதியாக 1967ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த காஸா பகுதியை மீண்டும் பாலஸ்தீனத்திடம் ஒப்படைத்தது இஸ்ரேல் படைகள் அங்கிருந்த வாபஸ் ஆனது. யூதக் குடியிருப்புகளும் அகற்றப்பட்டன.

இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் பாலஸ்தீன ஹமாஸ் தீவிரவாதிகள் தினந்தோறும் பேரணிகளை நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் மாலை நடந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்கள் கலந்துகொண்டகனர் ஹமாஸ் தீவிரவாதிகளும் ஒரு லொறியில் ஆயுதங்கள் மற்றும் துப்பாக்கிகள், வெடி குண்டுகளை ஏற்றிக்கொண்டு பேரணில் வந்தனர்.

அப்போது, அந்த லொறியில் திடீர் என்று குண்டு வெடித்தது. இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 19பேர் உடல் சிதறிப் பலியானார்கள். 60க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர்.

இந்த வெடி குண்டுத்தாக்குதலுக்கு இஸ்ரேல்தான் காரணம் என்று பாலஸ்தீனர்கள் புகார் கூறி உள்னனர். ஆனால் இஸ்ரேல் இந்தப் புகாரை மறுத்துள்ளது. தீவிரவாதிகள் சென்ற லொறியில்தான் குண்டு தவறாக வெடித்துள்ளது என்று இஸ்ரேல் கூறியுள்ளது. (ற)

WORLD NEWS உலக தரிசனம்



தாய்லாந்தில் புலி, கரடி, பாம்புகளைப்பிடித்து கடத்தல்காரர்களின் தேவைக்கேற்ப உயிருடனோ, கொன்றோ சப்ளை செய்யும் இடத்தை அந் நாட்டுப்பொலிஸார் நேற்று கண்டு பிடித்தனர். விலங்குகள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் பார்சலாக தயாராக கூறு போடப்பட்டிருந்த புலிகளை படத்தில் காணலாம்.

# பஸ் தீப்பற்றி எரிந்தது 20 பேர் உடல்கருகிப் பலி

(ஹுஸ்டன்)



அமெரிக்காவில் 'ரீட்டா'சூறாவளி கடந்து செல்லும் பாதையில் ஒரு பஸ் தீப்பிடித்து எரிந்ததில் 20 பேர் உடல் கருகிப் பலியாகியுள்ளனர்.

அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஹுஸ்டன் கல்வெஸ்டன் நகரங்களை 'ரீட்டா' சூறாவளி மிரட்டிவருகிறது. இவ்விரு நகரங்களிலும் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் வெளியேறி வருகின்றனர்.

ஆயிரக்கணக்கான வாகனங்களில் அவர்கள் செல்லும் நெடுஞ்சாலையும், 'ரீட்டா' சூறாவளி கடந்து செல்லும் பாதையில் அமைந்திருப்பதால் அங்கு ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல் அதிகாரிகளுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில்,ஹுஸ்டன் நகரின் புறநகர்ப் பகுதியான கல்லாஸ் என்ற இடத்தில் நேற்று ரீட்டாவுக்கு அஞ்சி வேறிடத்திற்கு 20 பேர் சென்ற பஸ் தீப்பிடித்து எரிந்தது.இதில் 20பேர் உடல் கருகிப் பலியானதாக ஹுஸ்டன் நகர உள்ளூர் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.(ற)



ஆந்திராவில் பலத்த மழை பெய்து வருவதால் பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

விஜயவாடாவில் குடியிருப்புப் பகுதியில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் பொது மக்கள் வீடுகளின் கூரைகளில் எறி தஞ்சம் புகுநதுள்ளனர். மழைக்கு இதுவரை 74 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கவனயீனத்தால் பறிபோன நுரையீரல்

(டோக்கியோ)

டாக்டரின் தவறால் 60 வயது முதியவரின் நுரையீரலின் 'சிறுபகுதி அகற்றப்பட்டது.

இச்சம்பவம் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள தேசிய புற்றுநோய் மைய மருத்துவமனையில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

அந்த முதியவர் உடல்நலக் குறைவு காரணமாக அம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அதேநேரத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட வேறு இரண்டு நோயாளிகளின் உடலிலிருந்து 'செல்'மாதிரி எடுக்கப்பட்டு ஓர் உறையில் வைக்கப்பட்டிருந்தது.

அதன்மீது அந்த முதியவரின் பெயரை ஆய்வுகூட ஊழியர் முத்திரை குத்திவிட்டார். அதனால் அந்த முதியவருக்கு புற்றுநோய் இருப்பதாக டாக்டர் தவறாகக் கருதிவிட்டார். முதியவரின் நோய்க்கு அறுவைச் சிகிச்சையே தேவையில்லை.

இருப்பினும், அவருக்கு புற்றுநோய் இருப்பதாகக் கருதியதால் டாக்டர் அறுவைச் சிகிச்சை செய்தார். அதில் நுரையீரலின் ஒரு பகுதியை அகற்றிவிட்டார். பின்னர் உண்மை தெரியவந்ததால், மருத்துவமனை நிர்வாகம் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டது.(ற)

## இன்று ஒரு தகவல்

# தன்வினை தன்னைச்சுடும்

"ஸ்வயங்கிருத அபராதம்" என்றால் என்னென்று தெரியுமா உங்களுக்கு? நாம் செய்யும் ஒரு தவறு நமக்கே இடைஞ்சலாக வந்து முடிவதுண்டு. இதை விளக்குவதற்காக மாயூரம் வேதநாயகம்பிள்ளை வேடிக்கையாக ஒரு கதை சொல்லியிருக்கிறார். அவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் என்ற நாவலில் இது வருகிறது.

ஒரு கணவன் மனைவிக்கிடையில் எப்போது பார்த்தாலும் ஏதாவது சண்டை வந்து கொண்டேயிருக்கும். அடிக்கடி ஒருத்தரையொருத்தர் திட்டிக் கொண்டேயிருப்பார்கள். அப்படி ஒருநாள் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் அவன் அவளைப் பார்த்து "உன்னைப் பழிவாங்குகிறேன் பார்" என்றான்.

"எப்படிப் பழிவாங்குவாய்?" என்று கேட்டாள் மனைவி "கொல்லையில் ஒரு பெரிய ஆழமான குளம் இருக்கிறதல்லவா? அதில்" என்று ஆரம்பித்தான். "அதில்?" என்று அதட்டினாள் மனைவி. "அதில் நான் போய் விழுந்துவிடுவேன்" என்று முடித்தான் கணவன். அப்படியும் மனைவி விடவில்லை. நீ அந்தக் குளத்தில் விழுவதை நான் என் கண்ணால் பார்க்கவேண்டும். அதை இப்போதே செய். வா என்று கூறி அவனை இழுத்துச் சென்றாள். இவனும் பலி ஆடுமாதிரி பின்னால் செல்கிறான்.

குளம் வந்தது "இதோ இருக்கிறது நீ சொன்ன குளம் இதில் குதித்துவிடு" என்றாள். இவனும் குதிப்பதற்குத் தயாரானான். தூரப் போய் நின்று அங்கிருந்து வேகமாக ஓடி வந்து அந்த ஆழமான குளத்தில் பொத் என்று விழ வேண்டும். அவன அதற்காக தூரத்தில் போய் நின்றான். ஒருவிநாடி யோசித்தான். அதன் பின்பு வேகமாக ஓடிவந்தான். குளத்தின் அருகே வந்ததும் அப்படியே நின்று விட்டான் குதிக்கவில்லை.

மனைவி சும்மா இருப்பாளா? "ஏன் குளத்தில் விழவில்லை?" என்று சத்தமிட ஆரம்பித்தாள். இவன் மெதுவாகச் சொன்னான் "அது வந்து... வேறு ஒன்றுமில்லை. எனக்கு நீந்தத் தெரியும். அதனால் நான் குளத்தில் குதித்ததும் நீந்திக் கரைக்கு வந்தாலும் வந்துவிடுவேன். நான் தப்பித்து வராத அளவுக்கு நீதான் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். அதாவது எனது இரண்டு கைகளையும் நீ பின்னால் சேர்த்துக்கட்டிவிடு. அதன் பின்பு நான் நந்த வேண்டுமென்று நினைத்தாலும் அதுமுடியாதே" என்றான்.

அதுவும் நல்ல யோசனைதான் என்று நினைத்தாள் மனைவி. அதேபோல் அவனைக் குளத்தின ஓரமாக நிறுத்தி வைத்து கைகளிரண்டையும் பின்பக்கமாகச் சேர்த்துக் கட்டிவிட்டாள். இப்போது எப்படி ஏற்பாடு என்றால அந்த ஆள் குளத்தின் ஓரமாக நிற்கவேண்டியது. அவள் தூரத்திலிருந்து வேகமாக ஓடிவந்து அவனைத் தள்ளிவிட வேண்டியது.

அவன் குளத்தின் ஓரமாக நின்று கொண்டான். மனைவி தூரத்திலிருந்து வேகமாக ஓடிவந்தாள் அவனைப் பிடித்துத் தள்ளிவிடுவதற்கு அருகில் வந்ததும் திடீரென்று அவன் விலகிக் கொண்டான். ஓடிவந்த வேகத்தில் அவளால் திடீரெனறு பிரேக் போடமுடியவில்லை. நேராக ஓடிவந்து குளத்தில் விழுந்துவிட்டாள். விழுந்ததும் தண்ணீரில் கையையும், காலையும் அடித்துக்கொண்டு ஆ! ஊவென்று கத்தினாள் ஐயோ! என்னைத் தூக்கிவிடுங்களேன்... கரையில் சேருங்களேன்... காப்பாற்றுங்களேன் என்று கத்தினாள. கரையில் நின்று கொண்டிருந்த அவளது கணவன் மிக நிதானமாக யோசித்தான் "நான் என்ன செய்வது? உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான் நினைக்கிறேன். இருந்தாலும் அது முடியாது. ஏனென்றால் நீ தானே கையைப் பின்னால் கட்டிவிட்டாய்? இப்போது நான் என்ன செய்ய முடியும்?"என்று சொல்லிவிட்டான். இதுதான் ஸ்வயங்கிருத அபராதம் என்பது.

இந்தக் காலத்திலெல்லாம் கணவன் மனைவிக்கிடையில் தகராறு என்றால் யாரும் குளத்தைத் தேடிக்கொண்டு போவதில்லை. நேராக நீதிமன்றம் சென்று விடுவார்கள். ஒருவர் அப்படித்தான் நீதிமன்றம் சென்றார். "என் மனைவியுடன் குடும்பம் நடத்த முடியாது விவாகரத்து வேண்டும்" என்று மனு கொடுத்தான். விசாரணை வந்தது.

அரசாங்க வக்கீல் கேட்டார் 'ஏன் சார் உங்கள் மனைவி கோபக்காரரா?'என்று. 'இல்லை' என்றான் இவன். 'அவர் ஊதாரித்தனமாக செலவழிப்பாரா?' என்றார். 'இல்லை' என்றான். 'அவர் நிறையப் பொய் சொல்வாரா?' என்றார். 'இல்லை' என்றான. 'அவர் உங்களை மதிப்பது இல்லையா?' என்றார் வக்கல. அப்படியெல்லாம் ஒன்றுமில்லை என்றான் இவன். "அப்படி இருக்கையில் ஏன் விவாகரத்து கேட்கிறீர்கள்?" என்றார் அவர்.இவன் மெதுவாக நீங்கள் கேட்ட அத்தனை குறைகளும் என்னிடம் உள்ளது. அதனால்தான் கேட்கிறேன் என்றான்.

தென்கச்சீ கோ. சுவாமிநாதன்

# ஒட்டுமொத்த மாணவர்களுக்கும் விடுக்கின்ற சவாலாகவே இதனைப் பார்க்கின்றோம்

## மருத்துவபீட மாணவன் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டமைக்கு மாணவர் ஒன்றியங்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

எழுச்சி கொண்ட மக்களை இராணுவத்தினர் தடுத்து விட முடியாது பல்கலைக்கழக மாணவர்களையோ மக்களையோ அச்சுறுத்துவதனூடாக இராணுவத்தினர் எப் பயனையும் அடைந்துவிடமுடியாது. மாறாக நெருக்கடிக்குள்ளான சமாதான முயற்சிகள் மேலும் சீர்குலைந்து யுத்தத்திற்கான வழியையே இது உருவாககும் என்பதை இராணுவத்தினரும் இலங்கை அரசும் உணர்ந்துகொள்ள வேண்டும். இராணுவத்தினரின் இவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்படாவிடின் பாரிய எதிர் விளைவுகளைச் சந்திக்க வேண்டியேற்படுமென யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் ஆகியன தெரிவித்துள்ளன.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவர் முகமாலையில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இவை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் ஆகியன வெளியிட்டுள்ள அறிக்கைகளின் விபரம் வருமாறு,

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

நேற்று முன்தினம் 7.45 மணியளவில் முகமாலை இராணுவ சோதனைச் சாவடியூடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவனை இராணுவத்தினர் கைதுசெய்ததுடன் தேவையற்ற முறையில் அவரைக் கடுமையான சோதனைக்கும் உட்படுத்தியுள்ளனர்.

இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாட்டைப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.சமாதான முயற்சிகள் தேக்கமடைந்து எவ்வேளையிலும் போர் வெடிக்கும் என்ற நிலையில் மக்கள் வாழகின்றனர்.

இச் சூழலில் வன்முறையற்ற முறையில் அமைதியாக எமது அபிலாஷைகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தும் நோக்கோடு பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் முன்னெடுக்கின்ற பொங்குதமிழ் 2005 நிகழ்வை திட்டமிட்டு குழப்புகின்ற நோக்கோடு இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் செயற்பட்டமையானது மாணவர் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களையோ மக்களையோ இவ்வாறு அச்சுறுத்துவதனூடாக ஏப்பயனையும் இராணுவத்தினர் அடைந்துவிட முடியாது. மாறாக நெருக்கடிக்குள்ளான சமாதான முயற்சிகள் மேலும் சீர்குலைந்து யுத்தத்திற்கான வழியையே இது உருவாக்கும் என்பதை இராணுவத்தினரும் இலங்கை அரசும் உணர்ந்துகொள்ள வேண்டும். எனவே இத்தகைய செயறபாட்டை இராணுவத்தினர் நிறுத்த வேண்டும்.

### யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவர் தடுத்துவைக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்த வேளை படையினரால் வழிமறிக்கப்பட்டு கடுமையாக மிரட்டப்பட்டதோடு பலாத்காரமாக பல அசௌகரியங்களுக்கும் இம் மாணவன் உள்ளாக்கப்பட்டதாகவும தான் ஒரு பல்கலைக்கழக மாணவன் என்று கூறியபோதும் படையினர் அதற்குரிய அந்தஸ்தினை வழங்காது மிகவும கீழ்த்தரமான முறையில நடத்தியுள்ளனர். சம்பவ இடத்தில் நின்ற தமிழ் மாணவர் ஒன்றிய உறுப்பினர்கள் படையினரிடம் நீங்கள் செய்வது முறையல்ல என்று சுட்டிக்காட்டிய போதும் உங்களை சுட்டுக்கொல்வோம் எனவும் படையினர் எச்சரித்தனர்.

படையினரின் இத்தகைய நடவடிக்கை தொடர்ந்த வேளையில் அங்கு வந்து சேர்ந்த பெருமளவான மாணவர்களால் தடுத்துவைக்கப்பட்ட மாணவன் மீட்கப்பட்டார். இருந்தும் படையினர் சிங்களமொழியில் ஏதோ எழுதி கையொப்பமும் வாங்கியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தினை ஒட்டுமொத்த மாணவர்களுக்கும் விடுக்கின்ற சவாலாகவே நாங்கள் பார்க்கின்றோம். மாணவர்களுடைய பண்பையோ, பலத்தையோ அறியாதவர்களாய் சிங்கள இராணுவம் இருப்பது வேடிக்கை.

எதிர்வரும் பொங்குதமிழ் நிகழ்வுகள் ஏற்பாடாகியிருககும வேளையில், பொங்குதமிழ் நிகழ்வை குழப்பம் அடைய வைப்பதற்கே படையினர் இவ்வாறான அநாகரிகமான செயலை செய்திருக்க வேண்டும்.

எழுச்சி கொண்ட மக்களை சிங்களக் காடையர்களால் தடுத்துவிட முடியாது சிங்கள இராணுவம் இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தாவிட்டால் பாரிய எதிர்விளைவுகளை சந்திக்க நேரிடும் .

இவ்வாறு அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ர)

# 2006 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நவ.8 இல் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

துரித அபிவிருத்தித் திட்டங்களை இலக்காகக் கொண்டு 2006ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 8ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தினை பாராளுமன்றில் சமர்ப்பிப்பது எதுவித சிக்கல்களும் தற்போது இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களில் அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அம் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஒக்டோபர் 4ஆம் திகதி குறைநிரப்பு பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதன் மீதான உரை நவ. 8ஆம் திகதி சபையில் இடம் பெறும. அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கான நிவாரணங்கள்,அபிவிருத்திகள் தொடர்பான யோசனைகள முன்வைக்கப்படவுள்ளன.



இதேவேளை, நோர்வே விசேட பிரதிநிதியின் அடுதத இலங்கை விஜயம் தொடர்பாக தகவல்களை விரைவில் வழங்குவதற்கு நோாவே தூதரகம் இணங்கியுள்ளதாக சமாதான செயலகத்தற்கும் நோர்வே தூதரகத்திற்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போது இவ் இணக்கப்பாடு காணப்படடது.

தறபோதைய நிலைமையில் பிரசாரம் யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்த பேச்சுவார்த்தை பின்புலத்தினை அமைத்துக் கொள்வதற்கு அடுத்த நோர்வே பிரதிநிதியின விஜயம் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு நோர்வேத் தூதரகம் இணக்கம் தெரிவித்துள்ளது எனவும் குறிப்பிட்டார். (ற-4)

# சகல சமூகமும் ஏற்றுக் கொள்ளும் வகையில் வட-கிழக்கு பிரச்சினைக்கு சமூகத் தீர்வு

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

சாவதேச ஒத்துழைப்புடனும் நாட்டில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடனும் பேச்சுவாத்தை மூலம் ஒரே நாடு என்ற நிலையினை தோற்றுவிக்கப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



நாட்டின் இறைமையினை பாதுகாக்கும் வகையிலும் சகல சமூகங்களும் ஏற்றுக கொள்ளக்கூடிய வகையிலும் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம தீர்வு பெற்றுக்கொடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கான மக்கள் ஆணையினை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பெறுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அநுராதபுரம் ஜெயசிறிமகாபோதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதான வழிமுறைகள் தொடர்பான அரசு-விடுதலைப் புலிகளுக்கு இடையிலும் இரண்டு பிரதான கட்சிகளுக்கிடையிலும் இணக்கப்பாடு நிலவுகின்றது .

இதேவேளை, இவ்விடயத்தில் சர்வதேச சமூகத்தின் இணக்கப்பாடும் இருக்கின்றது .சகல சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஜனநாயகத் தீர்வுக்கான நிலையொனறு உருவாகியுள்ளது

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமானால் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் இனப்பிரச்சினை தொடர்பாக இரண்டு கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டுடன் தமிழழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தர். (ற-4)

# பஸ்சேவை விஸ்தரிப்பு

(கொழும்பு)

சேவையிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ள சுமார் ஆயிரத்து 500 பஸ் வண்டிகளைத் திருத்தியமைத்து சேவையில் ஈடுபடுததுவதற்கான நடவடிக்கையில் மத்திய போக்குவரத்துச சபை ஈடுபட்டுள்ளது.

இவ்வருட இறுதிக்குள் இந்த பஸ்கள் திருத்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட இருப்பதாக போக்குவரத்து பிரதியமைச்சா் தெரிவித்துளளார்.

இநத பஸ்வண்டிகளை திருத்தி சேவையில் ஈடுபடுத்துவதற்காக திறைசேரி 200 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருபபதாகவும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-9)

அரம்போலும் கூர்மையரேனும்
மரம் போல்வர் மக்கட் பண்பிலாதவர் - குறள்

வலம்புரி

# அமெரிக்காவைத் தாக்கும் புயல் ஈராக்கிய மக்களின் பெருமூச்சா?

எளியாரை வலியார் தாக்கினால் வலியாரை தெய்வம் தண்டிக்கும் என்பது இறைநம்பிக்கை கொண்டார் வாக்கு.

சமூகவியல் ரீதியான தத்துவங்களை விஞ்ஞான ஆய்வு கூடங்களில் பரிசோதனை செய்து நிருபிப்பது முடியாத காரியம். தர்க்க ரீதியாக நிருபிக்கப்படாதவற்றை ஏற்றுக்கொள்வது முடியாது என்ற வாதம் ஆய்வாளர்களுக்கு உரியதாக இருக்கலாம்.

ஆனால் நடைமுறையில்-மனித வாழ்வியலில் நம்பிக்கைகள் வீண்போகாமல் தொடர்கின்றது. நம்பிக்கையே வாழ்க்கை என்பதன் அடிப்படையில் சிலவற்றை ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

அவ்வகையில் அமெரிக்காவைத் தாக்கும் அசுரப்புயல் குறித்து உள்ளார்ந்தமாக ஆய்வு செய்வது 'தர்மம்'பற்றிய சிந்தனைக்கு அவசியமானதாகும்.

உலகம் முழுதையும் கட்டுப்படுத்தும் சர்வ வல்லமை தன்னிடம் இருப்பதாக கருதிக்கொள்ளும் அமெரிக்கா, ஈராக் மீது வலிந்து போர் தொடுத்தது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷிற்கு தலைவணங்க சதாம் ஹுசைன் மறுத்துவிட்டார் என்பதற்காக. ஈராக் மீது கொடூரமான தாக்குதலை அமெரிக்கா நடத்தியது.

உலக அமைதிக்கு கேடு செய்யும் இரசாயன ஆயுதங்களை ஈராக் வைத்துள்ளது என்ற குற்றச்சாட்டின் பேரில் ஈராக் மீதான தாக்குதல் நடத்தப்பட்டது.

ஈராக்கின் அதிபர் சதாம் நேர்மையான ஆட்சியாளர் அல்ல என்பது தெரிந்த விடயமாயினும் அதற்கு தண்டனை வழங்குவதற்கு அமெரிக்காவிற்கு இருக்கக்கூடிய அதிகாரம் என்ன என்பதே கேள்வி.

ஈராக்கிடம் இரசாயன ஆயுதம் இருக்கின்றது அதனைத் தேடுவதற்காகவே தாக்குதல் நடத்தப்படுகின்றதென அமெரிக்கா கூறுமாயின் ஈராக்கல் எடுக்கப்பட்ட இரசாயன ஆயுதங்கள் எங்கே என்பதும்,

அவ்வாறான ஆயுதங்கள் இல்லாத விடத்து அமெரிக்கப் படைகள் ஈராக்கில் இருந்து வெளியேறாதது ஏன் என்பதும் நியாயமான கேள்விகள்.

..க, ஈராக்கின் பொருளாதாரத்தைச் சுரண்டுவது, சதாமைப் பழிவாங்குவது என்ற இரண்டு இலக்குகளை அடைவதற்காகவே ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்கா மேற்கொண்டது.

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதல் நியாயமற்றதொன்றென்பது தெரிந்த விடயமாயினும் அதனைக் கண்டிக்கும் திராணி எந்த நாட்டிற்கும் இருக்கவில்லை.

அமெரிக்கத் தாக்குதலால் அல்லல் பட்ட ஈராக்கிய மக்கள் விட்ட கண்ணீரும் பெருமூச்சும் இன்று அசுரப்புயலாக அமெரிக்காவைத் தாக்குகின்றதோ என எண்ணத்தோன்றுகின்றது.

இது அமெரிக்காவிற்கு நல்லதோர் பாடமாக அமையட்டும். குறிப்பாக ஈழத்தமிழர்களை நசுக்குவதற்காக இலங்கை அரசுக்கு தான் வழங்கும் உதவிகள் குறித்தும் அமெரிக்கா மீளாய்வு செய்யவேண்டும். இது எதிர்காலத்தில் அமெரிக்காவின் நலனுக்கு உதவுவதாக அமையும்.

பொங்குதமிழ் நிகழ்வு சிறப்புற அமைய

# கனேடியத் தமிழ் இளையோர் அமைப்பு வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

இன்று எமது தமிழீழ மண்ணில் ஏற்பட்டுள்ள மக்கள் புரட்சி தமிழீழ மாணவர்களால் கருத்தரிக்கப்பட்ட ஒரு எழுச்சி அந்த வகையில் தமிழீழ மாணவர் சமுதாயத்தினரால் நடாத்தும் பொங்கு தமிழ் மாநாடு சிறப்புற வேண்டுமென கனேடியத் தமிழ் இளையோர் அமைபபு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் ,

கடந்த மூன்று வருடங்களாக அமுலிலுள்ள யுத்த நிறுத்தம் தமிழ்மக்களுக்கு எந்தவித நலனையும் வழங் காத பொழுதிலும் புலம் பெயர்ந்து வாழும் இளம் சந்ததியினராகிய எமக்கு எமது தாய் நாட்டைப்பற்றி அறிந்து கொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தது.

அந்த வகையில், இலங்கைத்தீவில் ஒரு நிறைவான மக்களின் தேவைகளை சரிவரப் புரிந்து நிறைவேற்றும் ஒரு தமிழீழ அரச கட்டமைப்பையும் அதன் தலைவமையின் பின்னால் அணிதிரண்டு நிற்கும் உறுதியான மக்கள் சக்தியையும் நாம் கண்கூடாகக்காணக் கூடியதாக இருந்தது.

எமது தமிழீழ மண்ணில் இன்று நடைமுறையில் இருக்கும் இந்தத் தனியரசை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டிய தேவை இன்றைய காலத்தின் கட்டாயமாக ஏற்பட்டுள்ளது. எமது மக்களின் துயரங்களைக் கண்டு சர்வதேசசமூகம் வாய்மூடி கண்கட்டி இனியும்மௌனம் சாதிப்பதில் எந்தவித அர்த்தமும் இல்லை.

எமது தனியரசுப் பிரகடனத்தை நாமே நிர்ணயிக்க வேண்டிய கட்டாயமும் அதற்குரிய அங்கீகாரத்தைப் பெற்றுத் தர வேண்டிய பொறுப்பும் இன்றைய மாணவர் சமுதாயத்தினரின் கரங்களிலேயே உள்ளது என்பதை நாம் நன்கு அறிவோம்.

வவுனியா,கிளிநொச்சி புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட தமிழ்த்தேசிய எழுச்சிப்பிரகடன நிகழ்வுகள் எமது மக்களின் அபிலாஷைகளையும் ஆத்ம உணர்வுகளையும் வெகுவாக வெளிப்படுத்தி நின்றன. அதேபோல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பொங்குதமிழ் அதி சிறப்புற அமைய பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து உங்கள் கரங்களை வலுவாகப் பற்றிக்கொண்டு எமது தமிழ் இளையோர் அமைப்பு கனடாக் கிளையின் சார்பில் மனதார வாழ்த்தி நிற்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# தேர்தலுக்காக பொதுவுடமைகள் துஷ்பிரயோகம் சாடுகிறது 'டிரான்ஸ் பரன்ஸ் இன்டர்நஷினல்'

(கொழும்பு)

உறுதியான பொதுமக்கள் பங்கேற்பினையும் துஷ்பிரயோகத்தினை ஒழிப்பதற்கான உறுதியான அரசின் ஈடுபாட்டினையும் ''டிரான்ஸ் பரன்ஸ் இன்டர் நஷினல் அமைப்பு'' வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் காலங்களில் பொதுவுடமைகள் துஷ்பிரயோகம் செய்யப்படும் கேவலமான நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெறுவதாக அவ் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச கூட்டுத்தானங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் இது தொடர்பாக ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்கத்தவறியவர்களாக உள்ளனர்.

அதனால் அண்மைக்கால ஊடக அறிக்கைகள் ஜனாதிபதித் தேர்தல் குறித்து விழித்தெழ வேண்டிய உண்மையை வெளிப்படுத்தியுள்ளன.

ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவோரின் வாசஸ்தலங்களில் பெரும் செலவிலான அரசியல் கூட்டங்கள் நடாத்தப்படுவதாக அறிக்கைகள் மூலம் அறிய முடிந்துள்ளதாகத் தெரிவித்துள்ள அவ்வமைப்பு பொதுத்துறையின் புதிய நியமனங்கள் அரசியல் அமைப்பின் 17ஆவது திருத்தத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட அடிப்படை நியமனங்களுக்கு கேற்றவகையில் வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழுமபில் அண்மையில் நடைபெற்ற அரசியல் கூட்டங்களில் அரசநிறுவனங்களுக்குச்சொந்தமான வாகனங்கள அரசியல் நடவடிக்கைகளுக்கு எந்தளவு உபயோகப் படுத்தப்படுகின்றன என்பதைத் தெளிவாகக் காண முடிந்தது.

இதேவேளை, அரச ஊடகங்களின் பெறுமதிமிக்க ஒலி ஒளிபரப்பு நேரமானது கட்சி சார்புடைய நோக்கங்களுக்காக ஒதுக்கப்படுகின்றது.இவ்வாறு கட்சி சார்பான அரசியல் விளம்பரங்களுக்கு குறித்த அரச ஊடகங்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அரசியல் கட்சிகள் அதற்குப் பணம் செலுத்தும் என்பதற்கும் எந்தவித உத்தரவாதமும் இல்லை எனவும் அவ்வமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4)

# தியாகி திலீபன் நினைவு நிகழ்வுகளை உணர்வு பூர்வமாக அனுட்டிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் 18 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் யாழ்.குடாநாடு முழுவதும் தேசிய எழுச்சிப்பேரவையினால் உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்கள், கூட்டுறவாளர்கள் இதனை அனுட்டிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அனைத்து தேசிய எழுச்சிப்பேரவை அலுவலகங்களிலும் முன்பாக சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரித்தும், நினைவுப் பந்தல்கள் அமைத்தும் தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்துமாறும் எழுச்சிப் பாடல்களை ஒலிபரப்பி நிகழ்வுகள் சிறப்புற நடைபெற ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் அனைத்து தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர்கள் முன்னின்று இதனை செயற்படுத்துமாறும் தேசிய எழுச்சிப்பேரவையின் ஊடகப்பேச்சாளர் கேட்டுள்ளார்.

தியாகி திலீபனின் நினைவுதின இறுதி நாள் நிகழ்வுகளாக அடையாள உண்ணாவிரதம், காலை நிகழ்வுகள் போன்றன அந்தந்த கோட்டங்களில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்களையும் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். மேலும் அனைத்து பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் தங்களது சங்கத்தலைமையலுவலகம் கிளைகள் முன்பாக சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரித்தும், நினைவுப் பந்தல்கள் அமைத்தும் தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்துமாறும் எழுச்சிப்பாடல்களை ஒலிபரப்பி நிகழ்வுகள் சிறப்புற நடைபெற ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் ப.நோ.கூ.சங்கங்களின் தலைவர்கள், பொ.துமுகாமையாளர் ஆகியோர் முன்னின்று இதனை செயற்படுத்துமாறும் யாழ்.மாவட்ட கூட்டுறுவு சங்கங்களின் சமாசத்தின் சார்பில் அதன் தலைவர் கேட்டுள்ளார்.

தியாகி திலீபனின் இறுதி நாள் நிகழ்வுகளாக அடையாள உண்ணாவிரதம், காலை நிகழ்வுகள் போன்றன அந்தந்தக் கோட்டங்களில் காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் அனைத்து பணியாளர்கள், பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொள்ள ஏற்பாடுசெய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ற)

# மஹிந்தவின் ஆட்சியில் 30 இலட்சம் பேருக்கு வேலை!

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்று அமைக்கும் அரசில் அடுத்த ஆறு ஆண்டு கால நிர்வாகத்தில் 30 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

30 இலட்சம் வேலைவாய்ப்புக்கள் அடுத்த ஆணடில் ஏற்படுத்தப்படும் 31ஆயிரம் நிரந்தர நியமனங்கள் ஏற்கனவே பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டன எனவும் அவர் தெரிவித்தார். (ற-4)

# 5 சதவீத தனியார் துறையினரே பட்ஜெட்டில் பயன்பெறுவராம்

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டத்தில் நிவாரணமாக பெற்றுக் கொடுப்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளின் மூலம் தனியார் துறையில் தொழில் புரியும் நூற்றுக்கு 5வீதத்தினர் மாத்திரமே பயன்பெறவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட சம்பள யோசனை அரச துறைகளை சார்ந்த சில நிறுவன ஊழியர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை.

இதனை சட்ட மூலமாக்கியதன் மூலம் ஜனாதிபதித் தேர்தல் இலாபமிடுவதற்கான உபாயமாகவே இது பயன்படுத்தப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவு 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல்வழங்கப்படும்வகையில் சட்ட மூலத்தில் திருத்தம் செய்யப்படவேண்டும் எனவும்அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

# தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

ஆரம்ப காலத்தில் தீயோரின் தொடர்பைத் தவிர்த்து விடு. உலகியலில் நாட்டம் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளாதே. அது உனது மனப் போக்கையே மாற்றி விடும். உனக்கு ஏதாவது தீங்கு நேருமாயின் இறைவன் உன்னிடம் விளையாடுகிறான் என நினைத்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் இரு.

சுவாமி விவேகானந்தர்

## திரைப்படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் காண்பிக்கப்படும் திரைப்படத்தில் இன்று உலகப் புகழ்பெற்ற இயக்குநர் சத்தியஜித்திரேயின் படைப்பில் ஜல்ஷாகர் (சங்கீத அறை) என்ற வங்கமொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் காண்பிக்கப்படவுள்ளது. இன்று மாலை 5.30 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும் இத்திரைப்படத்தை ஆர்வலர்கள் எவரும் பார்வையிடலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச)


அதிரடி விலைக்கழிவில்

10000/=, 15 000/= 18 000/=

வீடுகளில், அலுவலகங்களில்

பாவிக்கக்கூடிய முறையில் டயலொக் G.S.M,

மொபிரெல் G.S.M, மேசைத் தொலைபேசிகள்

பூட்டித் தரப்படும்.

கையடக்க தொலைபேசி விற்பனைக்குண்டு

கையடக்கத் தொலைபேசிகள் லொக் உடைத்துக் கொடுக்கப்படும்

டயலொக் 500/=. மொபிரெல் 300/= பக்கேஜ் இணைப்புக்களுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.

தொடர்புகட்கு:

பவர் செலூலர் ட்ரேடிங் கம்பனி

OFFICE: 185 முதலாம்மாடி கஸ்தூரியார் வீதி

SHOP: 205/01 கஸ்தூரியார் வீதி (ராஜா தியேட்டர் அருகில்)

T.P: 0712 - 399220, 0714 - 182500, 0773518330 யாழ்ப்பாணம்

(C-அ-1678)





## பட்ஜெட் சமர்ப்பிக்க ஐ.தே.க கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு ஒருவார காலம் இருக்கையில் வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வந்து தேர்தல் வாக்குறுதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிக்கு எதிராக நாட்டிற்குள்ளும் நாடாளுமன்றத்தினுள்ளும் கடும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (ச)

## ரீட்டாவினால்....

ரீட்டாவின் தாக்குதலால் டெக்ஸ்ஷாஸ் மற்றும் லூசியானா மாகாணங்களில் வீதியோர மரங்கள் அடியோடு சாய்ந்தன.

மின்பிறப்பாக்கிகள் வெடித்துச் சிதறின. அப்பகுதிகள் தொடர்ந்து இருளில் மூழ்கியுள்ளது. சூறாவளியின்போது மின்னல் தாக்கியதில் ஹேல்வஸ்டன் என்ற இடத்தில் மூன்று கட்டடங்கள் தீப்பற்றி எரிந்தன. ஹோட்டல் ஒன்றும் தீக்கிரையாகி இடிந்து தரைமட்டமானது.

ஏற்கனவே கத்தரீனாவினால் புரட்டிப் போடப்பட்ட நியூ ஓர்லியன்ஸ் பகுதியில் ரீட்டாவினால் பெரும் சேதம் ஏற்பட்டது. கனத்த மழை பெய்தமையினால் நகரமே வெள்ளக்காடாக மாறி தத்தளிக்கின்றது. மழையும் சூறாவளியும் மாறிமாறி அடித்து நொருக்குவதால் நியூஓர்லியன்ஸ் நகரமே உருக்குலைந்து காணப்படுகிறது.

கத்தரீனா சூறாவளியின் தாக்குதலினால் கதிகலங்கிப்போயுள்ள அமெரிக்க அரசு, ரீட்டா சூறாவளியினால் ஏற்பட்ட சேதங்களுக்கு செய்வதறியாது திண்டாடுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. (ச-4)

## யாழ்.மேல் நீதிமன்ற....

சரத் என். சில்வா முன்னிலையில் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

1976ஆம் ஆண்டு சட்டத்தரணி படிப்பை முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்து நிறைவுசெய்த தியாகேந்திரன் 1986ஆம் ஆண்டு நீதிபதியாக பணியாற்றத் தொடங்கினார்.

நீதிபதி மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி யாக பணியாற்றிய பின்னர் கடந்த மூன்று ஆண்டுகளாக திருகோணமலை மாவட்ட நீதிபதியாக அவர் பணியாற்றி வந்தார்.

வவுனியா, மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் நீதித்துறைப்பணிகளிலும் இவர் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-ற)

## அரசியல்பணி குறித்த....

நேற்று முன்தினம் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஏ-9 பாதையூடாக பளையைச் சென்றடைந்து அங்கு இளம்பரிதியுடனான சந்திப்பில் ஈடுபட்டார்.

அதன்பின்னர் நேற்று யாழ். மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் அரிபெக்கா நிமலேக், இளம்பரிதியுடனான சந்திப்பில் ஈடுபட்டார். இச்சந்திப்புக் குறித்தும், கண்காணிப்புக்குழுத் தலைவருடனான சந்திப்புக் குறித்தும் இளம்பரிதி ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தார்.

மாவட்ட மட்டப் பேச்சுக்களில் இராணுவத்தினரால் இணக்கம் காணப்பட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்படவில்லை. அவற்றுக்கு எதிராகவே இராணுவத்தினர் செயற்பட்டனர். இது குறித்து கண்காணிப்புக்குழுவிற்குத் தெரியப்படுத்தினோம்.

எமது உறுப்பினர்களை அச்சுறுத்தும் வகையிலும் படையினர் செயற்பட்டனர். இதனையடுத்து அரசியல் போராளிகளுக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டது. இது குறித்து எமது தலைப்பீடத்திற்கு அறிவித்தோம்.

அவர்களின் உத்தரவின் பேரிலேயே நாம் அங்கிருந்து வெளியேறினோம். தற்போது படையினர் சிவில் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். இது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயலாகும்.

மீனவர்களுக்கு எதிராக பாஸ் நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களை இராணுவத்தினர் அச்சுறுத்தியும் வருகின்றனர். இச்சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென கண்காணிப்புக்குழுவை கேட்டுக்கொண்டதாக இளம்பரிதி தெரிவித்தார். (ச-4)

## எம்.பியின் வாகனம் முகமாலையில் சோதனை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தன் வந்த வாகனம் முகமாலையில் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டது.

தான் பாராளுமன்ற உறுப்பினர் எனத் தெரிவித்தபோதும் இராணுவத்தினர் துருவித்துருவிச் சோதனை செய்ததாக ஈழவேந்தன் தெரிவித்தார். (ச-4)

## மட்டக்களப்பில்...

களில் நன்கு பயிற்றப்பட்டவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நகர மத்தியில் பாதுகாப்புமிக்க பிரதேசத்தில் இடம் பெற்ற இச்சம்பவமானது பல்வேறு தரப்பினரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது. (ச-4)





நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

இன்னும் சில நாட்களுக்கு

மணிகண்டன், சிம்ரன், ஜெய்ஆகாஷ் நடித்த

கிச்சா வயசு 16

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

புதிய வெளியீடு

சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த

சாணக்கியா











இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.